பெரியார்
புரட்சி மொழிகள்

பெரியார் நூற்றாண்டு
நிறைவு விழா வெளியீடு

செய்தி - மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு

பெரியார் புரட்சி மொழிகள்
முதற் பதிப்பு : 17-9-1979

விலை :

நூலகப் பதிப்பு : ரூ. 3

119808

இந்நூலைப் பெற
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் :

சென்னை மாநகரில் :

1. இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

R84wM79
N79

2. செய்தி அலுவலர்,
மாநில செய்தி நிலையம்,
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை.
சென்னை-600 002.

மாவட்டங்களில் :

நேர்முக உதவியாளர் (செ. ம. தொடர்பு),
மாவட்ட ஆட்சித் தலைவர்.

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பெற்றது.

அணிந்துரை

பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை நினைவு படுத்தும் முறையில், அவரது புரட்சிச் சிந்தனைகள் அடங்கிய பொன்மொழி நூல் ஒன்றினை உருவாக்கிட வேண்டும் என்று, நூற்றாண்டு விழாக்குழு பரிந்துரை செய்திருந்தது. அந்தப் பணியை நிறைவேற்றிட 'வல்லுநர் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அரிய முயற்சியே இந்நூல்.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் அறிவுக்கு ற்றலுக்கு, நேர்மைக்கு, நாணயத்திற்கு, உண் மக்கு, உழைப்புக்கு, ஒழுக்கத்திற்கு, உயர்வுக்கு, பண்புக்கு, படிப்புக்கு மதிப்புத்தர வேண்டும் என்றும் கடவுள்—மதம்—சாதி—மூடப் பழக்க வழக்கம்—குருட்டு நம்பிக்கை—சாத்திரம்—சம்பிரதாயம்—பில்லி—சூன்யம் மந்திரம்—தந்திரம்—பேய் பிசாசு—பூதம் போன்றவை பற்றிய கருத்துக்களை ஒழிக்க வேண்டும் என்றும் வாழ்நாள் முழுவதும் பல்லாயிரக்கணக்கான சிந்தனைக் கருத்துக்களை நாடெங்கணும் விதைத்துள்ளார். பெரியாரின் சிந்தனையோட்டத்திலிருந்து சிதறி விழுந்த சில புரட்சிக் கருத்துக்கள் மட்டுமே 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்கிணங்க இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன.

பெரியாரின் சிந்தனைக் கருத்து ஒவ்வொன்றும் இன்னும் பல நூற்றாண்டுக் காலம் வரையில், மக்களிடத்திலே மனப் புரட்சியையும், சமூகப் புரட்சியையும் ஏற்படுத்தக்கூடிய வல்லமை வாய்ந்தனவாகும்.

'பெரியார் புரட்சி மொழிகள்' என்னும் இந்நூல் அறியாமை இருளை அகற்ற, ஏந்திச் செல்லக்கூடிய ஓர் ஒளி விளக்காகப் பயன்படக்கூடியதாகும். அறி

யாமை என்னும் இருட்டறையில் இடர்ப்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பெரியாரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வழி வகுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், புரட்சிமொழிகளைத் திரட்டி, நூல் வடிவாக்குவதற்கு உறுதுணைபுரிந்த பெருமக்கள் அனைவர்க்கும் நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பாக என் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
17—9—1979

இரா. நெடுஞ்செழியன்
தலைவர்,
தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு

முன்னுரை

அறிவார்ந்த ஆழ்ந்த சிந்தனை—அகிலத்தையே ஒரு பல்கலைக் கழகமாகக் கொண்டு ஆய்ந்த பெரும் அனுபவம் (பட்டறிவு)—இவைகளின் பின்னணியிலேயே அய்யா அவர்களின் புரட்சி மொழிகள் அனைத்தும் உருப் பெற்றுள்ளன.

முதன்மையாகத் தமிழ்மக்களின் இழிநிலை கண்டு பதறினார்கள்—பின்னர் திராவிட சமுதாயத்தின் வீழ்ச்சி கண்டு குமுறினார்கள்—இறுதியாக மனித சமுதாயத்தின் மடமை இருள் நீக்கும் வழிமுறைகளைத் தெளிவாக ஆய்ந்து புரட்சிமொழிகளாக வெளிப்படுத்தினார்கள்.

அவைகள் அனைத்தையும் இந் நூலில் முறையே முழுமையாகத் தொகுத்து வெளியிடக் காலமும், சூழ் நிலையும் இடந்தரவில்லை யென்றாலும், ஞாலத்து மக்கள் அனைவர்க்கும் அறிவூட்டும்—காலத்தை வென்று என்றும் நிலைத்து நிற்கும் பல புதுமைக் கருத்துக்களை—புரட்சிமொழிகளை முறையாகத் தொகுத்து இச் சிறிய நூலின் மூலம் வழங்கியுள்ளோம்.

தமிழக அரசு அமைத்த 'தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு'வின் பரிந்துரைக்கிணங்க நியமிக்கப்பட்ட 'வல்லுநர் குழு' இந் நூலாக்கத்திற்குத் துணைபுரிந்தது மிக்க பொருத்தமுடைய ஒன்றாகும்—புகழ்மிக்க செயலாகும்.

அறிஞர் பெருமக்கள் நிறைந்த அக் குழுவில் ஓர் உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பினை நல்கிய விழாக் குழுத் தலைவரும் வல்லுநர் குழுத் தலைவரு மான டாக்டர் நாவலர் அவர்கட்கும், புரட்சிமொழி களை ஆய்வு செய்து தொகுத்திட அரும்பணி யாற்றிட்ட வல்லுநர் குழுத் துணைத் தலைவர் திரு. நெ. து. சுந்தரவடிவேலர் அவர்கட்கும், அவற்றைத் திரட்டிடத்

துணை நின்ற வல்லுநர் குழு உறுப்பினர் பேராசிரியர் மா. நன்னன் அவர்கட்கும், எல்லா வகையிலும் துணை நின்று நூல் வெளிவர உதவிய தமிழ்நாடு அரசுக்கும்—இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அய்யா அவர்களின் நூற்றாண்டு விழாவினை நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடவும், இத்தகைய நூல்கள் வெளிவரவும் காரண கர்த்தாவாக இருந்து அனைத்தையும் இயக்கிவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
17—9—1979

திருவாரூர் கே. தங்கராசு
தலைவர்,
பொன்மொழிகள் தொகுப்புக் குழு.

வல்லுநர் குழு

பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, பெரியாரின் முழு வாழ்க்கை வரலாற்று நூல், சிறுவர்களுக்கான பெரியார் வரலாற்று வரைபடநூல், பெரியாரின் பொன்மொழிகள் தொகுப்பு நூல் ஆகியவற்றை உருவாக்கவும், பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட கல்வெட்டுக்கள் அமைக்கவும் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டது வல்லுநர் குழு.

தலைவர் :

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

துணைத் தலைவர் :

திரு. நெ. து. சுந்தரவடிவேலு

உறுப்பினர்கள் :

திரு. எஸ். வி. சிட்டிபாபு

திரு. ஏ. பி. சனார்த்தனம், எம். பி.

டாக்டர் இரா. சனார்த்தனம்

புலவர் மா. நன்னன்

திரு. திருவாரூர் கே. தங்கராசு

திரு. எம். இராசகோபாலன்

செயலாளர் :

திரு. சி. நல்லரசு,
(செய்தி—மக்கள் தொடர்புத் துறை)

ஆதாரக் குறிப்பு விளக்கம்

பொன்மொழிகளுக்கு அடியில், அவற்றிற்குரிய ஆதாரம் பற்றிய குறிப்பு தரப்பட்டிருக்கிறது. எந்தெந்த நூல்கள், நாளிதழ்கள், சிறப்பு வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்து அவை எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய இந்தக் குறிப்புகள் உதவும்.

எடுத்துக்காட்டு :

1. (வி. 15.1.61; 1: பெ. செ.)

வி.—விடுதலை 15.1.1961

1—முதல் பக்கம்

பெ. செ.—பெட்டிச் செய்தி.

2. (வி. 26.8.67; 3:6)

வி.—விடுதலை 26.8.1967

3—மூன்றாம் பக்கம்

6—ஆறாவது பத்தி

சில இடங்களில் பக்கம் மட்டும் தரப்பட்டிருக்கலாம்; பத்தி விடப்பட்டிருக்கலாம்.

3. (பெ. சி. III. ப. 1304)

பெ.சி. பெரியார் சிந்தனைகள்.

III—மூன்றாம் தொகுதி

ப. 1304—பக்கம் 1304

4. (கு. 2.6.35 ; 11)

கு—குடிஅரசு 2.6.1935

11—பக்கம் 11

5. பகு.—பகுத்தறிவு.

மாற்றுச்சொல் பட்டியல்

1. அர்த்தம் .. பொருள்
2. இஷ்டம் .. விருப்பம்
3. இலாகா .. துறை
4. எஜமான் .. ஆண்டான், முதலாளி.
5. கஷ்டம் .. சிரமம், சிக்கல், கடினம், அல்லல், அரிது. தொல்லை.
6. காலேஜ் .. கல்லூரி
7. சயன்ஸ் .. அறிவியல் விஞ்ஞானம்.
8. ஜனங்கள் .. மக்கள்
9. ஜனநாயகம் .. மக்களாட்சி
10. ஜவுளிக்கடை .. துணிக்கடை
11. ஜில்லா .. மாவட்டம்
12. ஜீவன் .. உயிர்
13. பிசினஸ் .. தொழில், வாணிபம்
14. புருஷன் .. கணவன், ஆண்
15. விஷயம் .. பொருள், செய்தி, ஒன்று
16. ஸ்தாபனம் .. நிறுவனம், அமைப்பு
17. ஓட்டு .. வாக்கு
18. நஷ்டம் .. இழப்பு
19. ராஜாக்கள் .. அரசர்கள், மன்னர்கள்
20. ஜமீன்தார் .. நிலப்பிரபு, நிலக்கிழார்
21. ஜோடி .. இணை
22. மெம்பர்கள் .. உறுப்பினர்கள்
23. அபேட்சகர் .. வேட்பாளர்
24. ஓட்டர்கள் .. வாக்காளர்கள்
25. உஷார் .. விழிப்பு
26. க்ஷயரோகம் .. எலும்புருக்கி நோய்.

சுருக்கமும் விளக்கமும்

அ. பே	—அறிவுப் பேழை
உ. எ.	—உயர் எண்ணங்கள்
வி.	—விடுதலை
கு.	—குடி அரசு
த. த.	—தமிழர் தலைவர்
ப.	—பக்கம்
பகு.	—பகுத்தறிவு
பெ. பொ.	—பெரியார் பொன்மொழிகள்
பெ. ம.	—பெரியார் மலர்கள்
பெ. செ.	—பெட்டிச் செய்தி
பெ. க. மு. தொ.	—பெரியார் களஞ்சியம் முதல் தொகுதி
பெ. சி. I	—பெரியார் சிந்தனைகள் முதல் தொகுதி
பெ. சி. II	—பெரியார் சிந்தனைகள், இரண்டாம் தொகுதி
பெ. சி. III	—பெரியார் சிந்தனைகள், மூன்றாம் தொகுதி
பெ. ஒ. வா. நெ.	—பெரியார் ஒரு வாழ்க்கை நெறி
த. வி.	—தத்துவ விளக்கம்.
தீ. ஒ. யா.	—தீண்டாமையை ஒழித்தது யார்?
உ. ம.	—உதிர்ந்த மலர்கள்.
இ. பா.	—இராமாயண பாத்திரங்கள்.
வா. து. ந.	—வாழ்க்கைத் துணைநலம்.
மே. கீ.	—மேல் நாடும் கீழ் நாடும்.
எ. சீ.	—எழுத்துச் சீர்திருத்தம்.
க. ஒ. க.	—கடவுள் ஒரு கற்பனையே.

நன்றி

பழைய ஏடுகளையும், நூல்களையும், சிறப்பு வெளியீடுகளையும் தந்துதவி, எல்லா வகையிலும் வசதி செய்து தந்த பெரியார் பகுத்தறிவு நூலக—ஆய்வகப் பொறுப்பாளர்களுக்கும், மறைமலையடிகள் நூலகப் பொறுப்பாளர்களுக்கும், மிக மிகக் குறைந்த கால இடைவெளியில் இந் நூலை அச்சிட்டுத் தந்த அரசினர் அச்சகத்தாருக்கும் மிக்க நன்றி.

வல்லுநர் குழு

உள்ளே...

1. நான் யார்? 1
2. நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள் 11
3. பகுத்தறிவு 12
4. சுயமரியாதை 21
5. சமுதாயச் சீர்திருத்தம் 24
6. அறிவியல் 29
7. கல்வி 31
8. தமிழ்மொழி 36
9. எழுத்துச் சீர்திருத்தம் 39
10. இலக்கியம் 42
11. திருக்குறள் 43
12. கலைகள் 46
13. கூட்டுறவு 48
14. பொருளாதாரம் 49
15. சமதர்மம்—பொது உடைமை 52
16. ஒழுக்கம் 54
17. பெண் உரிமை 57
18. திருமணம் 64
19. இளைஞர்கள் 67
20. அரசியல் 68
21. பொதுத்தொண்டு 73
22. சாதி ஒழிப்பு 77
23. பல்துறை 80
24. மலர்கள் 89
25 நான் மனிதனே! 92



நான் யார்?

ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

நான் யார்?

நான் எனக்குத் தோன்றிய, எனக்குச் சரியென்று படுகிற கருத்துக்களை மறைக்காமல் அப்படியே சொல்லுகின்றேன். இது சிலருக்குச் சங்கடமாகக்கூட இருக்கலாம். சிலருக்கு அருவருப்பாக இருக்கலாம். சிலருக்குக் கோபத்தையும் உண்டாக்கலாம் என்றாலும் நான் சொல்வது அத்தனையும் ஆதாரத்தோடுகூடிய உண்மைக் கருத்துக்களே தவிர பொய்யல்ல.

(வி. 15.7.68; 3;1)

அரசர்கள் என்பவர்களே இன்றைய உலகுக்கு அவசியமில்லாதவர்கள் என்றும், மக்களுடைய சுயமரியாதைக்குக் கேடானவர்கள் என்றும் கருதியும், சொல்லியும், எழுதியும் வந்திருக்கின்றவன் நான்.

அரசர்கள் மாத்திரமல்லாமல் பணக்காரர்கள், குறுநில மன்னர்கள், வியாபாரிகள், முதலாளிகள் என்கின்றதான கூட்டங்கள்கூட மக்களை அரித்துத் தின்னும் புழுக்களானதால், அவை அழிக்கப்பட வேண்டியவை என்றும்கூடச் சொல்லுகிறவன் நான்.

(கு. 6.10.35; 13;1)

எந்தக் காரியம் எப்படி இருந்தாலும் அரசியலில், பொது வாழ்க்கையில் கண்டிப்பாக மனித தர்மம் தவிர வேறு எந்தக் கால தர்மமோ, சமய தர்மமோ புகுத்தப் படக்கூடாது என்பதுதான் எனது ஆசையே ஒழிய, உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் என் விருப்பம்போல்தான் நடக்க வேண்டும் என்பதல்ல.

(வி. 8.9.39; 1;4)

நான் மறைந்துநின்று சிலரைத் தூண்டிவிட்டு எந்தக் காரியத்தையும் செய்யச் சம்மதிக்கமாட்டேன். ஒரு சமயம் எனக்கு அப்படிச் செய்ய ஆசையிருந்தாலும் எனக்கு அந்தச் சக்தி கிடையாது. மறைவாய் இருந்து காரியம் செய்ய, சக்தியும் சில சவுகரியமும் வேண்டும். அந்தச் சக்தியும் சவுகரியமும் எனக்கில்லாததாலேயே தான், நான் என் வாழ்நாள் முழுவதும் தொண்டனாகவே இருந்து தீர வேண்டியதாய் இருக்கிறது என்பதோடு, எதையும் எனக்குத் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்தித் தாட்சண்யம் இல்லாமல் கண்டிக்கவேண்டியவனாகவும் இருக்க வேண்டியிருக்கிறது.

(கு. 24.11.40; 5;4)

என்னைப் பொறுத்தவரையிலும் நான் என்றும் கட்சிக்காரனாக இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் கொள்கைக்காரனாகவே இருந்தேன்.

(வி. 1.6.54; 1;3)

எனது பொதுவாழ்வில் நான் அறிவு பெற்ற பிறகு, பார்ப்பனரல்லாதார் ஆட்சி என்றால் வலியப்போய் ஆதரித்தே வந்திருக்கிறேன். இதில் நான் மானம் அவமானம் பார்ப்பதில்லை.

(வி. 2.10.67;பெ.செ.)

மக்களின் மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டுமென்பதிலும் மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்கவேண்டுமென்பதிலும் எனக்கு 1925—ஆம் ஆண்டு முதலே உறுதியான எண்ணமும் ஆசையும் உண்டு.

(வி. 12.10.1967; 2:2)

நான் என் ஆயுள்வரை யாரிடமும் ஓட்டுக் கேட்க மாட்டேன். எனக்காக இரண்டு நல்ல (புகழ்) வார்த்தைகள் சொல்லும்படி யாரிடமும் எதிர்பார்க்கமாட்டேன்.

(வி. 15.10.67; 2:1)

நான் அரசியல், மதத்துறையின் பேரால் யோக்கிய மற்ற—மூட—சுயநல மக்களால் வெறுக்கப்பட்டவன்; துன்பப் பட்டவன்; நட்டப்பட்டவன்; மானத்தையும் பறிகொடுத்தவன்; மந்திரிப் பதவியை உதறித் தள்ளியவன்.

(வி. 14.11.67; 2;2)

இன்றையச் சுதந்திரத்திற்கு, ''முதன் முதல் நானாகவே சிறைக்குப் போகிறேன்'' என்று இந்த நாட்டில், ஏன் இந்தியாவிலேயே சிறைக்குப் போனது நானும் என் குடும்பமும்தானே.

(வி. 29.1.68; 2;3)

எனது சமுதாய மக்களுக்கு நன்மை செய்கிற கட்சி எதுவாக இருந்தாலும் அதனை ஆதரித்தும், என் சமுதாய மக்களுக்குக் கேடாகக் காரியம் செய்யும் கட்சிகளை எதிர்த்துமே வந்திருக்கின்றேன். ஆட்சியில் இருக்கிறது என்பதற்காக எந்தக் கட்சியையும் நான் ஆதரித்தது கிடையாது.

(வி. 4.3.68; 3;5)

நமது மக்களும், சமுதாயமும் மற்ற நாட்டு மக்களைப் போன்று முன்னேற்றமடைய வேண்டுமென்றுதான் நான் தொண்டாற்றுகிறேன். ஆனதாலே நம் மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களையும், நம் சமுதாய முன்னேற்றத்திற்காகக் காரியங்கள் செய்யக்கூடிய ஆட்சியாளரையும் சமுதாயத்தின் நலனைக் கருதியே ஆதரிக்கிறேன்.

(வி. 18.7.68; 2; பெ.செ.)

ஒரு சமயம் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படி சமாதான மாநாடு கூட்டி, காந்தியாரிடம் சங்கர நாயர், கள்ளுக்கடை மறியலை நிறுத்திவிட்டுப் பிறகு சமாதானம் பேசலாம் என்று கேட்டபோது, காந்தியார் சொன்னார்: ''கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது தமிழ்நாட்டிலே ஈ. வெ. ராமசாமி அவர்களின் மனைவி, தங்கை ஆகியவர்கள் கையில் உள்ளது'' என்று. அந்த அளவுக்கு நானும் எங்கள் குடும்பமும் காந்தியாரின் லட்சியங்களுக்காகச் சிறை சென்றவர்கள்.

(வி. 28.10.68 ; 3 ; 2)

நான் நிரந்தரமாக ஒருத்தனை ஆதரித்து வயிறு வளர்க்க வேண்டுமென்கின்ற அவசியமில்லாதவன். எவன் நமக்கு நன்மை செய்கின்றானோ, நமது சமுதாய இழிவு நீங்கப் பாடுபடுகின்றானோ அவன் அயல்நாட்டுக்காரனாக இருந்தாலும் சரி, அவனை ஆதரிப்பதில் எந்தக் குற்றமும் இல்லை என்று கருதுபவன் நான்.

(வி. 20.1.1969 ; 1 ; 2)

எனக்கு (அரசியல்) வாரிசு என்று யாரும் கிடையாது ; என்னுடைய கொள்கைகளும் கருத்துக்களும்தான் வாரிசு ; வாரிசு என்பது தானாகவே ஏற்பட வேண்டும்.

(பெ.சி. II ; 1230)

நரக வாழ்வு வாழ்வதாயிருந்தாலும், அங்கு நான் மனிதனாக மதிக்கப்படுவேனாகில் அவ்வாழ்வே இப்பூலோக வாழ்வைவிட மேலென்று கருதுவேன்.

நரக வாழ்வு மட்டுமல்ல, அதைவிடப் பல கொடிய துன்பங்களை அனுபவிக்க நேரும் இடமானாலும் அவ்விடத்தில் நான் மனிதனாக மதிக்கப்படுவேன் என்றால் அவ்வாழ்வே இவ்விழிசாதி வாழ்வைவிடச் சுகமான வாழ்வு என்று கருதுவேன்.

(கு, 1.5.1948 ; 1 ; 8)

''தீண்டப்படாதவர்களைக் கிணற்றில் தண்ணீர் எடுக்கவிடாவிட்டால் வேறு தனிக்கிணறு கட்டிக்கொடு ; கோயிலுக்குள் விடாவிட்டால் வேறு தனிக் கோயில் கட்டிக் கொடு'' என்றார் காந்தியார். அப்போது நான், ''கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்று இழிவுப்படுத்தும் இழிவுக்குப் பரிகாரமில்லாவிட்டால், அவன் தண்ணீரில்லாமலேயே சாகட்டும். அவனுக்கு இழிவு நீங்க வேண்டுமென்பது முக்கியமே தவிர, தண்ணீரல்ல'' என்றேன்.

(வி. 9.10.1957 ; 3 : 2)

இன்னும் எத்தனைக் காலத்துக்கு நாம் இந்த உலகத்தில் சூத்திரர்களாக இருப்பது ? நம் பின் சந்ததிகளையும் சூத்திரர்களாக இருக்க விடுவது? இந்தத் தலைமுறையிலாவது, இந்த விஞ்ஞான சுதந்திர காலத்திலாவது நமது இழிவு நீங்கி, நாம் மனிதத் தன்மை பெற ஏதாவது செய்ய வேண்டாமா ? இதைவிட மேலான காரியம் நமக்கு இருக்க முடியுமா ? அதனால்தான் எனது வாழ்நாள் முழுவதையும் இதற்கென்றே நான் அர்ப்பணித்து வந்திருக்கிறேனே ஒழிய முட்டாள் தனமல்ல ; துவேசமுமல்ல.

(வி. 17.11.1957 ; பெ. செ.)

சாதியை ஒழிக்கிறேன் என்றால் அது மேல்சாதிக்காரன்மேல் துவேசம் என்றும், வகுப்புவாதம் என்றும் சொல்கிறான். நாங்கள் ஏன் வகுப்புவாதி ? எந்த ஒரு அக்கிரகாரத்துக்காவது தீ வைத்து, எந்த ஒரு பார்ப்பனருக்காவது தீங்கு விளைத்திருக்கிறோமா? சாதி இருக்கக்கூடாது என்று கூறினால் வகுப்புத்துவேசமா ?

(வி. 25.10.61 ; பெ.செ.)

இந்த நாட்டில் சாதி இழிவைப் போக்கப் பாடுபட்டவர் எல்லாம் மலேரியாவுக்கு மருந்து கொடுப்பவர்கள் போன்றவர்கள். மற்றவனுக்கு வராமல் தடுக்கக் கூடியவர்கள் இவர்கள் அல்ல. நானோ மலேரியாவுக்குக் காரணமான கொசு வசிக்கின்ற தண்ணீர்த் தேக்கத்தைக் கண்டு கொசுவை அழித்துத் தடுக்கும் வைத்தியன் போன்றவன்.

(வி. 4.11.61 ; 3 ; 3)

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிருகங்கள் போல் நடத்தப்படுகிற பாட்டாளி, கூலி, ஏழை மக்கள்தான் எனக்குக் கண்வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சம மனிதர்களாக ஆக்குவதுதான் எனது கண்ணோய்க்குப் பரிகாரம்.

(வி. 15.10.67 ; 2 ; 1)

எனக்கு 60 வயதுக்குமேல் ஆகியும் இளைஞர் சகவாசத்தாலேயே எனது உணர்ச்சி முதுமையை அடைய வில்லை. ஏதாவது ஒரு காரியம் செய்யாமலிருக்க, எப்பொழுதும் மனம் வருவதில்லை. ஓய்வு, சலிப்பு என்பவற்றைத் தற்கொலை என்றே நான் கருதுகிறேன்.

(கு. 19.1.36 ; 8 ; 2)

மக்கள் உலகம் முழுவதும் ஒன்றுபட வேண்டும். மற்ற உயிர்களுக்குத் தன்னால் கெடுதி இல்லாத வாழ்வு பெற வேண்டும். மனிதனிடத்திலே பொறாமை, வஞ்சகம், துவேசம், கவலை, துக்கம் ஏற்படுவதற்கு இட மில்லாத சாந்தி வாழ்வுக்கு வகை தேடவேண்டும். இது தான் எனது ஆசை.

(கு. 7.8.38; 19 ;4)

என்னுடைய சக்தி சிறிது என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய (மனிதாபிமான) ஆசை அளவிட முடியாததாய் இருக்கிறது. அதனாலேயே சக்திக்கும் தகுதிக்கும் மீறிய காரியங்களைச் சொல்லவும் செய்யவும் தூண்டப்படுகிறேன்.

(கு. 25.8.40 ; 13 ; 1)

எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சரி என்று பட்டபடி நடவுங்கள் என்பதேயாகும்.

(கு. 24.11.40 ; 2 ; 2)

எனக்குச் சுயநலமில்லை என்று கருதாதீர்கள். நான் மகா பேராசைக்காரன். என்னுடைய ஆசையும் சுயநலமும் எல்லையற்றன. திராவிடச் சமுதாய நலனையே என் சொந்த நலமாக எண்ணி இருக்கிறேன். அந்தச் சுயநலத்திற்காகவே நான் உழைக்கிறேன்.

(வி. 15.1.55 ; 2 ; 3)

நீதிதான் சாட்சி ; எனக்கு வேறு சாட்சி இல்லை.

(வி. 20.11.57 ; 1)

யாவரும் கடைசியில் சாகத்தான் செய்வார்கள். சாவதற்காக ஒருவன் வாழ்வை வீணாக்குவதா ? எனக்கு உயிர் வாழ்வதற்குச் சிறிதளவு பொருளிருந்தால் போதும். மற்றப் பொருளையெல்லாம் பிறர்க்குப் பயன்படுத்தவே செய்கிறேன்.

(வி. 27.7.58 ; 3 ;5)

என் கருத்துக்கள் பராட்டப்படுகிறதா? அல்லது புறக்கணிக்கப்படுகிறதா? உயர்வாகக் கருதப்படுகிறதா? அல்லது இழிதாகக் கருதப்படுகிறதா? என்பதைக் குறித்து நான் கவலைப்படாமல், என் கருத்துக்கள் மற்றவர்களுக்கு எவ்வளவு கசப்பாயிருந்தாலும் உண்மையை எடுத்துரைப்பதுதான் என் வாழ்க்கையின் இலட்சியம்.

(வி. 28.9.58 ; 1 ; 1)

நான் (எனக்கு ஞாபகமிருக்கிற வரையில்) என்னுடைய 10-ஆவது வயதிலிருந்தே நாத்திகன். சாதி, சமயச் சடங்கு முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவன். ஒழுக்க சம்பந்தமான காரியங்களில்கூட மற்றவர்களுக்குத் துன்பமோ, தொல்லையோ தரப்படாது என்பதைத் தவிர, மற்றபடி வேறு காரியங்களில் ஒழுக்கத்துக்கு மதிப்புக் கொடுத்தவனும் அல்ல. பணம், காசு, பண்டம் முதலியவைகளில் எனக்குப் பேராசை இருக்கிறது என்றாலும், அவைகளைச் சம்பாதிப்பதில் சாமர்த்தியத்தையாவது காட்டியிருப்பேனேயொழிய, நாணயக் குறைவையோ, நம்பிக்கைத் துரோகத்தையோ காட்டியிருக்கமாட்டேன். யாரையும் ஏமாற்றலாம் என்பதில் நான் சிறிதுகூட முற்பட்டிருக்கமாட்டேன். வியாபாரத் துறையில் பொய் பேசியிருந்தாலும், பொது வாழ்வுத் துறையில் பொய்யையோ, மனமறிந்து மாற்றுக் கருத்தையோ வெளியிட்டிருக்கமாட்டேன். இப்படிப்பட்ட நான், எதற்காக ஒரு சமுதாயத்தாரிடம் விரோதமோ, குரோதமோ கொள்ளவேண்டும். நான் நமது நாட்டையும், சமுதாயத்தையும் ஆங்கில நாட்டுத் தன்மைக்கும், நாகரிகத்திற்கும் கொண்டுவரவேண்டும் என்கின்ற ஆசையுடையவன். இதற்கு முட்டுக்கட்டையாகப் பார்ப்பனச் சமுதாயம் இருக்கிறது என்று சரியாகவோ, தப்பாகவோ கருதுகிறேன்.

அப்படி இல்லை என்பதைப் பார்ப்பனர்கள் காட்டிக் கொள்ள வேண்டாமா? உண்மையிலேயே எனக்கு மாத்திரம் பார்ப்பனர்களுடைய ஆதரவு இருந்திருக்குமானால், நம் நாட்டை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டுவர என்னால் முடிந்திருக்கும்.

(வி. 1.1.62 : 1 ; 2)

நான் உலகமே நாத்திக (பகுத்தறிவு) மயமாக வேண்டும் என்பதற்காகவே உயிர் வாழ்பவன்.

(வி. 2.9.67 : 2 ; 1)

எனக்கு மக்கள் நலம்தான் இலட்சியம்.

(வி. 15.10.67 : 2 ; 1)

நான் பதவிவேட்டை உணர்ச்சிக்காரன் அல்ல. சமுதாய வெறி உணர்ச்சி கொண்டவன் ஆவேன்; நாளைக்கும் சமுதாய நலத்தை முன்னிட்டு எதையும் துறக்கவும், எதையும் செய்யவும் காத்திருக்கிறேன்.

(வி. 2.5.68; 2;3)

என் தொண்டெல்லாம் நம் மக்கள் உலக மக்களைப்போல் சரிசமமாக வாழவேண்டும்—அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத்தான்.

(வி. 24.7.68; 2; 2 பெ.செ)

எப்போதும் என்னிடம் என் பணம் என்று ஒன்றுமில்லை. நான் பொதுப்பணிக்கு வந்தபோது என்னிடமிருந்த பணத்தை — சொத்தையெல்லாம் இயக்கத்தின் பெயருக்கே எழுதி வைத்துவிட்டதால், இயக்கப் பணத்தில்தான் நான் சாப்பிடுவது முதல் எல்லாமாகும். நீங்கள் கொடுத்த பணத்தைத்தான் கல்லூரிக்கும் — மருத்துவ மனைக்கும் வழங்கினேனே தவிர, என் பணம் எதுவும் இல்லை. எது பொது நன்மைக்கானது என்று பார்த்து, (பொது) இயக்கப் பணத்தை அதற்காகச் செலவிட்டேன்.

(வி. 8.8.68; 3; 5)

என்னைப் பொறுத்தவரையில், ஒரு மனிதர் யாராக இருந்தாலும் தமிழர்பற்று உடையவர் என்று கருதினால், நான் அவருக்கு அடிமையே ஆவேன். குணம் குடி கொண்டால் உயிர்க்கு உயிர்தான். இல்லாவிடில் அவர் யாரோ என்று கருதுகிறவனாவேன்.

(வி. 15.9.68; 2; 1)

ஈ. வெ. ராமசாமி என்கின்ற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல், மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்.

அத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.

பகுத்தறிவையே அடிப்படையாகக்கொண்டு, கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், அத் தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இதுபோதும் என்றே எண்ணுகிறேன்.

(உ.எ. இறுதிப் பக்கம்)

நாதசுரக் குழாயாக இருந்தால் ஊதியாகவேண்டும் : தவுலாயிருந்தால் அடிபட்டுத்தானாக வேண்டும் என்பது போல்—எனக்குத் தொண்டை, குரல் உள்ளவரையில் பேசியாக வேண்டும் ; பிரசங்கம் செய்தாக வேண்டும்.

(பெ.சி. II. 794)

பழமையைப் பாராட்டுவது நமது மக்களுக்கு ஒரு பெருமையாகக் காணப்படுகிறது. நானோ பழமைப் பித்தை வெறுக்கிறவனாக இருக்கிறேன். அதனாலேயே நான் வெகு பேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள் சீக்கிரம் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

(கு. 2.8.36; 5; 1)

நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக்கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை.

(கு. 25.3.44;11; 3)

என்னைப் பொறுத்தமட்டிலும் நான் ஒழுக்கத்துடன் நடந்தால், உண்மையை ஒளிக்காமல் எதையும் நேர்மையுடன் கடைப்பிடித்தால் அதற்குத் தனிச்சக்தி உண்டு என்று நம்புகிறவன்.

(வி. 9.3.56; 3; 4)

நான் எனது கொள்கைக்கு—பேச்சுக்கு எந்த மேற்கோளையும் காட்டி விளக்குபவன் அல்ல. அப்படி அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று தேடித் திரிபவர்களின் செயல் அறிவுடைமையாகாது. ஆனால், நான் கூறிய கருத்துக்கு ஆதரவாக இன்ன இன்னாரும்

கூறியுள்ளார் என்று எடுத்துக்காட்ட வேண்டுமே அல்லாது இன்ன இன்னார் இன்ன இன்ன கூறியுள்ளார். ஆகவே நானும் கூறுகிறேன் என்று எடுத்துக்காட்டக்கூடாது.

(வி. 26.2.61; 2: 3)

ஒரு பகுத்தறிவுவாதி என்கின்ற எனக்கு மதப் பற்றோ, கடவுள் பற்றோ, இலக்கியப் பற்றோ, மொழிப் பற்றோ எதுவும் கிடையாது. அறிவிற்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது, மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ அதைப்பற்றியே பேசுவேன்.

(வி. 20.4.65; 3: 1)

"நீ ஒரு கன்னடியன்; எப்படித் தமிழனுக்குத் தலைவனாக இருக்கலாம்?" என்று என்னைக்கூடக் கேட்டார்கள். "தமிழனுக்கு எவனுக்கும் யோக்கியதை இல்லையப்பா" என்றேன். இதற்குக் காரணம், ஒரு தமிழன், இன்னொரு தமிழன் உயர்ந்தவனாக இருப்பதைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்கவே மாட்டான்.

(வி. 1.6.54; 1:1)

எனக்கு மக்களிடத்தில் ஏதோ ஓர் இயக்க சம்பந்தமான நட்புத் தவிர மற்றபடி உலக வழக்கமான நட்பு இல்லை என்பது எனக்குத் தெரியும். ஏன் அப்படிச் சொல்லுகிறேன் என்றால், அநேக துறைகளில் மக்கள் அபிப்பிராயத்துக்கு மாறான அபிப்பிராயம் சொல்லி எதிர்நீச்சல் நீந்திக்கொண்டு இருக்கிறேன். அப்படி இருந்தால் எப்படிப்பட்டவர்களுக்கும் இந்தக் கதிதான்.

(கு. 6.12.36; 7:4)

சாதாரண மொட்டை மரம் போன்றது என்னுடைய வாழ்க்கை. காய், பழம், பிஞ்சு இருக்குமானால் அம்மரத்தில் யாரும் கல்லெறியாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அப்படியும் எனக்கு என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணமில்லை. எதற்கும் கவலையற்ற எனக்கு யாரிடமும் பயமில்லை; தயவு வேண்டுமென்ற விருப்பமும் இல்லை.

(வி. 3.2.58; பெ. செ.)

பேச்சு என்றால் சிலர் அழகுக்குப் பேசுவார்கள்; சிலர் அலங்காரத்திற்காகப் பேசுவார்கள்; மக்கள் சிரிக்க வேண்டும்—கைதட்ட வேண்டும் என்று சிலர் பேசுவார்கள். சிலர் தாம் கற்றவைகளை வெளியிடுவதே முக்கியம் என்று பேசுவார்கள்; சிலர் தம் கருத்தை வெளியிடப் பேசுவார்கள். கடைசியில் சொன்ன ரகத்தினன்தான் நான்.

(வி. 3.2.63; 2:2)

நான் சொல்லுகிறவைகளை எல்லாம் நன்றாகக் கேட்டு, நல்லபடி சிந்தித்துப் பார்த்து உங்கள் அறிவிற்கு ஏற்றதாக இருந்தால் ஏற்றுக்கொண்டு அதன்படி நடவுங்கள் அல்லது தள்ளிவிடுங்கள். நான் கடவுளின் அவதாரம், கடவுள் என்னுள்ளே இருந்து சொல்கிறார் என்றோ, நான் தலைவன், நான் சொன்னபடிதான் நீங்கள் கேட்க வேண்டுமென்றோ உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை.

(வி. 3.11.67; 3:3)

ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கைக் குணமாக இருக்குமோ, அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றும் அந்தத் தாய் தனது மக்களில்—உடல் நிலையில் இளைத்துப் போய், வலிவுக் குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போசனையைவிட எப்படி அதிகமான போசனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அது போலத்தான நான் மற்ற வலுக்குறைவான பின்தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும், மற்ற வகுப்புக்களிடமும் காட்டிக் கொள்ளும் உணர்ச்சி ஆகும்.

(வி. 1.1.62; 1:1)

நான் துறவி. துறவிக்கு வேந்தன் துரும்பு என்பார்கள். எனக்கு வேந்தன் மாத்திரம் துரும்பல்ல; கடவுளும் துரும்பு. வேத சாத்திரங்கள் துரும்பு. சாதி துரும்பு. அரசியலும் துரும்பு. துரும்பு மாத்திரமல்ல; அவைகளை, எல்லா யோக்கியக் குறைவையும் காய்ச்சிச் சுண்டவைத்துப் பிழிந்தெடுத்த சத்து என்று சொல்லுவேன்.

(வி. 15.10.67; 2:1)

நீங்களே முடிவுசெய்துகொள்ளுங்கள்

மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கின்றவை போன்ற கொள்கை தாண்டவமாடும் ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக்குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகளாக்காமலோ விட்டிருப்பதைப் பார்த்தபிறகும்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் நீதிமான் என்றும் சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால், அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

(த. த. 7-ஆம் பதிப்பு பக். 64.)

பகுத்தறிவு

கீழ் ஏழு லோகம் மேல் ஏழு லோகம் கண்டுபிடித்த நமக்கு, இமயமலையின் உயரத்தை ஏன் வெளிநாட்டான் கூறவேண்டியிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். நடராசர் நாட்டியத்திற்கு தத்துவார்த்தம் கூறக் கூடிய அளவுக்கு அறிவு படைத்த நமக்கு, இந்த ஒலி பெருக்கியை எப்படிச் செய்திருக்க வேண்டும் என்பதை மட்டும் ஏன் தெரிந்துகொள்ள முடியவில்லை என்று கவனிக்க வேண்டும். பொது அறிவு வளர உங்கள் பகுத்தறிவை உபயோகிக்க முற்பட வேண்டும்.

(வி. 6.12.47 ; 1 : 3)

உலகில் மனிதன் மற்ற உயிரினங்களைவிடச் சிறந்தவனாகக் கருதப்படுவதற்குக் காரணம், அவன் எல்லையற்ற அறிவுச் சக்தி பெற்றிருப்பதுதான். மற்ற நாட்டு மனிதன் அந்த அறிவைப் பயன்படுத்தி மிகமிக முன்னேறிக்கொண்டு வருகிறான். ஆனால் இந்த நாட்டு மனிதனோ, அந்த அறிவினைப் பயன்படுத்தாத காரணத்தினால் மிக மிகப் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறான். இங்கு நாம், ஞான பூமியென்று சொல்லிக்கொண்டு கோயில் குளம் கட்டிக்கொண்டு இருக்கிறோம். அங்கோ அண்ட வெளியில் பறந்து உலகையே பிரமிக்கச் செய்கிறார்கள்.

(வி. 22.5.61 ; 1 ; பெ.செ)

மற்ற நாட்டில் எல்லாம் அறிவுக்குத்தான் மதிப்பு. அறிவைத்தான் நம்புவான். அறிவைத்தான் ஆதாரமாகக் கொள்வான். இந்த நாட்டிலோ குப்பைக் கூளங்கள், சாத்திர சம்பிரதாயங்கள், கடவுள், மதம், இவைகளைத்தான் நம்புகிறான்.

(வி. 10.7.61; 3:2)

சிந்தனை அறிவு ஒன்றுதானே உண்மையறிவாகக் கருதப்படக்கூடியது. வெறும் புத்தக அறிவு அறிவாகிவிடுமா? அதைக் குருட்டுப் பாடம் பண்ணி ஒப்புவித்தவனே மேதாவி ஆகிவிடுவானா? அப்படியானால், படித்த மேதாவிகள், பட்டதாரிகள், விஞ்ஞானப் பாடத்தில் பட்டதாரிகள், கல்லைக் கடவுள் என்று நம்பி அதன் காலில் விழுந்து வணங்குவார்களா? மகா விஞ்ஞானம் படித்த மகோன்னதப் பண்டித நிபுணர் என்பவர்களெல்லாம் பாப

விமோசனத்திற்காகத்தான் தீர்த்தமென்று சேற்று நீரை வாரித் தெளித்துக் கொள்வார்களா? அவர்கள் படித்த அறிவியலுக்கும், இந்தச் சாணி மூத்திரக் கலவைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?

(பெ.சி. I; 102)

இராமாயணத்திலும், பாரதத்திலும் ஆகாய விமானம் இருக்கிறது. ஆனால், அது மந்திர சக்தியால் ஓடியிருக்கிறது. ஆங்கில இலக்கியத்தில் ஆகாய விமானம் பற்றிய விளக்கம் இருக்கிறது. இது இயந்திர சக்தியால் ஓடுகிறது. நமக்கு எது வேண்டும்? மந்திர சக்தியா? இயந்திர சக்தியா?

(பெ.சி. II; 651–2)

ஒரே தகப்பனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றை இந்நாட்டிலும் ஒன்றை இங்கிலாந்திலும் வளர்த்துப் பாருங்கள். அவன் (இங்கிலாந்தில் வளர்ந்தவன்) எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பான்; இவன் எதையும் மதக் கண்கொண்டு பார்ப்பான்.

(பெ.சி. II; 971)

எதற்கும் பகுத்தறிவை உபயோகிக்க விடாமலும் ஆராய்ச்சி செய்யவோ ஆலோசனை செய்து பார்க்கவோ இடம் கொடுக்காமலும் அடக்கிவைத்த பலனே, நமது நாட்டின் இன்றைய இழிந்த நிலைக்கும் குழப்பத்திற்கும் காரணமாய் இருக்கிறது.

(கு. 4.5.30; 10: 4)

நீங்கள் எந்த முறையில் கடவுளை நிர்ணயித்தாலும், எந்த முறையில் எவ்வளவு நல்ல கருத்தில் மதத்தை நிர்மாணித்தாலும் பலன்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்குமே தவிர, மூட நம்பிக்கைக் கடவுளைவிட, குருட்டுப் பழக்க மதத்தைவிட சீர்திருத்தக் கடவுளும், பகுத்தறிவு மதமும் ஒன்றும் அதிகமாய்ச் சாதித்து விடப்போவதில்லை.

(கு. 26.2.33 ; 8: 4)

மனித சமூக நன்மைக்காக மக்கள் சரீர உழைப்பினின்றும் கால தாமதத்தில் இருந்தும் காப்பாற்றப்படவும், அதிகப் பயன் அடையவும் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் எப்படி முதலாளிமார்கள் ஆதிக்கத்திற்கு உள்ளாகி, உழைப்பாளியும் பாட்டாளியும், பட்டினியாக இருக்கப் பயன்படுகின்றனவோ அதுபோலவே, மனிதனுக்கு மேன்மையையும்

திருப்தியையும் கவலையற்ற தன்மையையும் உண்டாக்கித் தர வேண்டிய பகுத்தறிவானது, சிலருடைய ஆதிக்கத்திற்கு அடிமையாகி, மக்களுக்குத் துக்கத்தையும், கவலையையும் தரித்திரத்தையும் கொடுக்கப் பயன்பட்டு வருகிறது.

(கு. 25.5.35: 15; 2-3)

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் தேவைக்கும் பொருத்தமில்லாத காரியங்கள் பழக்கத்தின் பேராலோ, வழக்கத்தின் பேராலோ, தெய்வத்தின் பேராலோ மதத்தின் பேராலோ, சாதி வகுப்பின் பேராலோ மற்றெதன் பேராலோ நடத்தப்படக்கூடாது.

(கு. 29.9.40; 1: 4)

மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர கண்மூடித்தனமான மிருகத் தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாய்ப் புயன்படுத்தி, அதிகமான தொல்லையில் மாட்டிக் கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளை உருவாக்கிக் கொண்டான்.

(கு. 23.11.46; 7: 2)

வாழ்க்கையில் பேத நிலையும், போதவில்லையே என்கின்ற மனக்குறையும், தனிப்பட்ட சுயநலப் போட்டித் தொல்லையும் எந்த நாட்டிலாவது இருக்குமானால், அந்த நாட்டு மக்களுக்கு முழுப் பகுத்தறிவு இல்லை என்றும் எந்த நாட்டிலாவது அவை இல்லாமல் வாழ்வில் மக்கள் மனத் திருப்தியுடன் இருப்பார்களானால் அந்த நாட்டில் பகுத்தறிவு ஆட்சி புரிகிறது என்றும்தான் அர்த்தம்.

(வி. 5.2.51; 3: 1)

மனிதன் தனது சமூகத்தை வஞ்சித்துப் பொருள் சேர்த்துப் பகுத்தறிவுள்ள தன் பெண்டு பிள்ளைகளுக்குப் பணம் சேர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லுகிறான். ஆனால் மிருகம், பட்சி ஆகியவைகள் பகுத்தறிவு இல்லாத தனது பெண்டு பிள்ளைகளுக்குச் சொத்துச் சேர்த்துவைக்கக் கருதுவதில்லை. தனது குட்டிகளையும் குஞ்சுகளையும் அவை தானாக ஓடியாடும் பருவம் வந்தவுடன் தனித்து வாழ்ந்து கொள்ளும்படி கடித்தும் கொத்தியும் துரத்தி விடுகின்றன. அவற்றைப் பற்றிய கவலையோ ஞாபகமோ கூட அவைகளுக்குக் கிடையாது.

(வி. 19.2.58; 1 பெ.செ)

இரண்டாயிரம் ஆண்டு இடைக்காலத்தில் மக்கள் தங்கள் சொந்தப் புத்தியை உபயோகிக்கும் உரிமையை முற்றிலும் இழந்திருந்தார்கள். ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகளைக் கேட்கவே உரிமையில்லாதவராய்—எழுதியதைப் படிப்பவர் சொல்லியபடி கேட்டனர். சிந்தித்தால், தர்க்கித்தால், சந்தேகித்தால் பாவம் என்று கூறி அழுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான் அறிவு வளரவில்லை; சமுதாயம் மேலோங்கவில்லை.

(வி. 12.1.61; 1 பெ.செ)

கடவுள் சொன்னது, மகான் சொன்னது, ரிசி சொன்னது, அவதார புருடர்கள் சொன்னது என்று பார்க்கின்றானே ஒழிய, தன்புத்தி என்ன சொல்லுகிறது என்று பார்ப்பதே இல்லை.

(வி. 3.4.61; 3; 5)

பகுத்தறிவிற்கும் தன்மானத்திற்கும் முரண்பட்ட எதையும் நீக்க வேண்டும்,

(வி. 14.6.61; 1 பெ.செ)

•

குருட்டு நம்பிக்கையை அறவே விட்டுப் பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதானால் ஒரு மதமும் நிலைக்காது.

(வி. 15.10.62; 2; பெ. செ)

பேராசையில்லாவிட்டால் எந்த மனிதனும் தனது புத்திக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாததை ஒரு காலமும் நம்பமாட்டான்; பின்பற்றமாட்டான்.

(வி. 17.10.62; 2;ப.செ)

நம் மக்கள் பக்குவமடைய—மனித அறிவு பெற இன்னும் எத்தனை நூற்றாண்டு காத்திருக்கவேண்டுமோ தெரியவில்லை. தமிழ்நாடு ஒரு பிரளயத்தால், புயலால், வெள்ளத்தால், பூகம்பத்தால் அடிப்படை உட்பட அழிந்து புதுப்பிக்கப்பட்டாலொழிய விமோசனமில்லையென்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

(வி. 30.1.68; 2: 3)

பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது வெகு காலமாக நடந்து வருவதாகத் தெரிவதனாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; அநேகர் பின்பற்றுவதாலேயே நம்பிவிடக்கூடாது; கடவுளாலோ, மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவது ஒன்று நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவதாலேயே அதைத் தெய்விகம் என்றோ மந்திர சக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட தானாலும் நடுநிலைமையிலிருந்து பகுத்தறிவுக்குத் தாராள மாய் மனம்விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்க வேண்டும்.

(கு. 9.12.28;11,2)

பகுத்தறிவு மூலம் மனிதனின் ஆயுசு வளர்ந்ததோடு மனிதனின் சாவு எண்ணிக்கையும் மிகவும் குறைந்து விட்டது.

(வி. 4.10.67; 2: 6)

அறிவாளிக்கு, இயற்கையை உணர்ந்தவனுக்குத் துன்பமே வராது; உடல் நலத்துக்கு ஊசி போட்டுக் கொள் வதில் வலி இருக்கிறது. அதற்காக மனிதன் துன்பப்படுவ தில்லை. வலி இருந்தாலும் அதைப் பொறுத்துக்கொண் டால்தான் சுகம் ஏற்படும் என்று கருதிப் பொறுத்துக் கொள்ளுகிறான். அதுதான் அறிவின்தன்மை.

(வி. 13.9.68.; 2: 3)

சிந்தனாசக்திதான் மனிதனை மிருகங்களிடமிருந்தும் பட்சிகளிடமிருந்தும் பிரித்துக் காட்டுவதாகும். மிருகங் கள் மனிதனைவிட எவ்வளவோ பலம் பெற்றிருந்தும் அவை அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

மனிதனிடமுள்ள வேறு எந்தச் சக்தியைக்காட்டிலும், பகுத்தறியும் சக்திதான் அவனை மற்ற எல்லா உயிர் களினின்றும் மேம்பட்டவனாக்கி வைக்கிறது. ஆகவே அதை உபயோகிக்கும் அளவுக்குத்தான் அவன் மனிதத்தன்மை பெற்றியங்குவதாக நாம் கூற முடியும். பகுத்தறிவை உபயோகிக்காதவன் மிருகமாகவே கருதப்படு வான்.

(கு. 1.5.48; 5: 3)

இதைச் சிந்தித்தால் பாவம், இந்தக் காரியத்தை ஆராய்ந்தால் பாவம் என்று சொல்லிச் சொல்லி நம்மைப் பயமுறுத்திவிட்ட காரணத்தினால், இப்போது எந்தச் சங்கதியையும் நம்மால் ஆராய முடியாமல் போய்விட்டது. கொஞ்சம் துணிச்சலாக இந்தப்பக்கம் திரும்பிவிட்டோமானால் அப்புறம் வேகமாக வளர்ச்சி காண முடியும்.

காட்டுமிராண்டி என்றால் யார்? அறிவில்லாதவன், பகுத்தறிவில்லாதவன், இரண்டும் இருந்தும் சிந்திக்காதவன், சிந்திக்காமலே குறைகூறுபவன் ஆகியவர்கள் காட்டுமிராண்டி என்பதுதான் எனது கருத்து.

(வி. 3.11.67; 2; 2)

மூட நம்பிக்கைகளைப் பகுத்தறியாமல் பின்பற்றியதாலேயே உழைப்பாளி அடிமையாகவும், சோம்பேறி ஆண்டானாகவும் இருக்கும் நிலை வந்தது.

(5.11.67; பெ. செ)

நிர்வாண நாட்டில் கோவணம் கட்டிக்கொண்டு நடப்பவன் பைத்தியம் பிடித்தவன் என்று சொல்லப்படுவது போல் காட்டுமிராண்டி நாட்டில் பகுத்தறிவாதி பைத்தியக்காரன்போல் காணப்படுவது எப்படித் தவறாகும்?

(வி. 5.11.67; 2; 2)

எந்தக் காரியமானாலும், எந்த நிகழ்ச்சியானாலும் எதைச் செய்தாலும் அதற்குமுன், ''இது ஏன்? எதற்காக? அனுபவத்திற்கு, ஆராய்ச்சிக்கு, அறிவிற்கு ஒத்துவருகிறதா?'' என்று பார்க்கவேண்டும். அப்போதுதான் அறிவு வளர்ச்சி ஏற்படும். அப்படி இல்லாமல் பழக்கம், பழமை, முன்னோர்கள் என்று போனால் அறிவு வளர்வதற்குப் பதில் முட்டாள்தனம்தான் வளர்ச்சியடையும்.

(வி. 27.11.69; 34)

அவர் சொல்லிவிட்டார், இவர் சொல்லிவிட்டார் என்று ஒன்றையுஞ் செய்யாதேயுங்கள். இன்னொருவனுக்கு அடிமையாய் உங்கள் மனச்சாட்சியை விற்றுவிட வேண்டாம். எதையும் அலசிப் பாருங்கள். ஆராயுங்கள்!

(கு. 30–10–32; 9)

பணத்தையும், மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள். சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்கின்றீர்கள். ஆனால், உங்கள் பகுத்தறிவைச் சிறிதளவுகூடப் பயன்படுத்தத் தயங்குகிறீர்கள். இதில் மாத்திரம் ஏன் வெகு சிக்கனம் காட்டுகிறீர்கள்? இந் நிலையிலிருந்தால் என்றுதான் நாம் மனிதர்களாவது?

(கு. 1.11.36; 5; 1)

மந்திரியாவதைவிட முதல் மந்திரியாவதைவிட, கவர்னராவதைவிட, கவர்னர் செனரலாவதைவிட, அதற்கும் மேலான மகாத்மா ஆவதைவிட முதலில் நாமெல்லாம் மனிதர்களாகவேண்டும். மனிதர்களாக வேண்டுமானால் முதலாவது பகுத்தறிவு விளக்கமாக ஆகவேண்டும். இயற்கைச் சிந்தனாசக்தி வளர்க்கப்பட வேண்டும்.

(வி. 6.12.47; 1; 3)

ஒரு சேலை வாங்கினால்கூட சாயம் நிற்குமா? அதன் விலை சரியா? இதற்கு முன் இவர் கடையில் வாங்கிய சேலை சரியாக உழைத்திருக்கிறதா? இக்கடைக்காரர் ஒழுங்கானவர்தானா என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்துத் தான் வாங்குகிறோம். இப்படிப்பட்ட சில்லறைக் காரியங்களுக்கெல்லாம் பகுத்தறிவை உபயோகிக்கும் நாம் சில முக்கியமான விசயங்களில் மட்டும் பகுத்தறிவை உபயோகிக்கத் தவறி விடுகிறோம். இதனால் ரொம்பவும் ஏமாந்தும் போகிறோம். இதை உணர்த்துவதுதான்— பகுத்தறிவின் அவசியத்தை வற்புறுத்துவதுதான் எனது முதலாவது கடமை.

(கு. 1.5.48; 12; 2)

இன்று நமக்கு வேண்டியது அறிவு வளர்ச்சி. அறிவு வளர்ச்சி பெற்று, ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும். அறிவு ஆட்சி செய்தல் வேண்டும்.

(வி. 7.3.61; 3; 2)

மனிதனுக்கு இன்று வேண்டியது பணமோ, வீடு, வாகனமோ அல்ல. புத்தி வளர்ச்சிதான்; பணம் சம்பாதிப்பதில் போட்டி போடுவதைவிட, புத்தி சம்பாதிப்பதில் போட்டிபோடவேண்டும்.

(வி. 14.3.61; 3; 1)

உங்களை ஆள்வது கடவுளோ, மகானோ, மகாத்மாக்களோ அல்ல. உங்கள் அறிவுதான். நீங்கள், நான் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் உங்கள் பகுத்தறிவுக்குச் சரியென்று பட்டதைமட்டும் ஏற்றுக் கொண்டு, மற்றதைத் தள்ளிவிடுங்கள்.

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். உயிரினங்களில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இதில் மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள். மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

(வி. 16.8.69 ; 2 ; 1)

சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு.

(பெ. பொ. ; 8)

மனிதன் நம்பிக்கைவழி நடப்பதைவிட்டுவிட்டு அறிவின் வழிச் சென்று எதையும் சிந்திக்க வேண்டும். எதுவும் அறிவிற்கு நிற்கின்றதா என்று உரசிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் மனிதன் காட்டுமிராண்டி நிலையில் இருந்து மனிதத் தன்மை பெறமுடியும்.

(வி. 13.8.61 ; 3 ; 5)

உன் சொந்தப் புத்திதான் உனக்கு வழிகாட்டி; அதை நல்ல முறையில் பயன்படுத்து, பிறரிடமுள்ள அவ நம்பிக்கையைக் கைவிடு. உன் பகுத்தறிவுக்கே வேலி போட்டதால்தான் அறிவு வெள்ளாமை கருகிப்போயிற்று. முன்னோர் சொல்லிப் போனது அற்புதமல்ல ; அதிசயமுமல்ல, அதை அவர்களிடமே விட்டுவிடு. அதில் நீ சம்பந்தப்படாமல் நீயே செய்ய, கண்டுபிடிக்க, முயற்சி செய். அறிவுக்கே முதலிடம் கொடு.

(வி. 13.1.63 ; 2 ; பெ. செ)

உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர்—பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.

(வி. 16.12.69; 3; 6)

மாறுதலைக் கண்டு அஞ்சாமல், அறிவுடைமையோடும் ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சிசெய்து, காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்கவண்ணம் தள்ளுவன தள்ளிக் கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்வது வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.

(கு. 20.1.35; 10 ; 4)

சுயமரியாதை

நமது நாட்டில் உயர்ந்த சாதி என்கிற கொள்கை ஒழிந்து, தாழ்ந்த சாதி என்கிற கொள்கை அழிந்துவிட்ட பிறகுதான் "சுயமரியாதை"யை நினைப்பதற்கு யோக்கியதை உண்டு.

(கு. 10,7,27 ; 10 : 1)

இந்தியாவின் மதமும் அரசியலும் பொருளாதாரமும் சமூக வாழ்வும் வகுப்புப் பேதத்தை அடிப்படையாகக் கொண்டே இருந்து வருகிறது. அதனாலேயேதான் சமூகத்தில் சிலர் மேலாகவும், பலர் கீழாகவும் வாழவேண்டியிருப்பதுடன் மக்களுக்கு இவ்வகையில் சுயமரியாதை உணர்ச்சியே இல்லாமலும் போய்விட்டது.

(கு. 18.7.37 ; 5:14)

மானத்தைப்பற்றிக் கவலை இல்லாதவன் எவ்வளவு படித்தவனானாலும், அவன் தாசிக்குச் சமமானவனே ஆவான். அவனது படிப்பும் மானாபிமானமுள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.

(வி. 26.1.43 ; 3 ; 1)

மனித தர்மத்தை அடிப்படையாக வைத்து, மனித சமுதாயத்திற்கு யாராவது தொண்டாற்ற வேண்டுமானால் முதலில் செய்யவேண்டியது, பகுத்தறிவுப்படி மக்களை நடக்கச் செய்வதும் சிந்திக்கச் செய்வதுமே யாகும்.

(வி. 25.7.68: 3 : 4)

தெரியாத—புரியாத கடவுளை மனிதன் நம்பித்தான் ஆகவேண்டும் என்பதான கட்டாயம் ஏற்பட்டு, மனிதன் நம்ப ஆரம்பித்ததின் பயனே இவ்வளவு பொய்களையும் நம்பவேண்டியவனாகி விட்டான்.

(பெ.க. மு.தொ. 292)

யார் எந்தக் கருத்தினைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சியடைய மாட்டான். ஆனதால் யார் சொல்வதையும் நீங்கள் கேளுங்கள். பின் உங்கள் அறிவைக்கொண்டு சிந்தியுங்கள். உங்கள் அறிவிற்குச் சரியென்று பட்டதை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடக்க முயற்சி செய்யுங்கள்.

(வி.25.7.68 ; 3 ; 2)

ஒரு மனிதனின் சுயமரியாதை உணர்ச்சிக்கு எது எது பாதகமாய்க் காணப்படுகிறதோ, அவைகளையெல்லாம் மாற்றுவதுதான் உண்மையான சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்.

(கு. 18.12.32 ; 8 ; 4)

உங்கள் பகுத்தறிவினாலும், உங்கள் அனுபவ உண்மையாலும் உங்களுக்கு ஒன்று தோன்ற, உலகப் பழக்க வழக்கத்துக்கு, சாத்திரத்துக்கு, மதக் கட்டுப்பாட்டுக்கு என்கின்ற நிர்ப்பந்தத்தினால் அதற்கு மாறாக நீங்கள் நடக்க வேண்டிய அடிமைத்தன்மை ஏற்பட்டால், அதைத்தான் சுயமரியாதைக்கு விரோதம் என்று சொல்லுகின்றோம்.

(பெ.சி. 1 ; 189 ; 90)

மனிதனுக்கு எல்லாவற்றையும்விட முக்கியமான உணர்ச்சியான மான—அவமானம் என்னும் தன்மானமாகிய சுயமரியாதையைத்தான் பிறப்புரிமையாகக் கொள்ளவேண்டியிருக்கின்றது. ஏனெனில், ''மனிதன்'', ''மானுடன்'' என்ற பதங்களே மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட மொழிகள். ஆதலின் மனிதன் என்பவன் மானமுடையோன். எனவே, மனிதனுக்கு மனிதத் தன்மையைக் காட்டும் உரிமையுடையது மானம்தான். அத் தன்மானமாகிய சுயமரியாதையைத்தான் மனிதன் பிறப்புரிமையாகக் கொண்டிருக்கின்றான்.

(கு. 9.1.27 ; 5 ; 2)

மனிதன் தனக்குள்ளாகவே, தான் மற்றவனைவிடப் பிறவியில் தாழ்ந்தவன் என்கிற உயர்வு தாழ்வு உணர்ச்சியைப் போக்கித் தன்னம்பிக்கையும், சுயமரியாதையும் பெற வேண்டும்.

(கு. 3.4.27 ; 5 ; 2)

உண்மையான சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்குத் தோன்றிவிட்டால், அதுவே அரசியலையும், தேசீயத்தையும், மற்றும் மத இயலையும் தானாகவே சரிப்படுத்திக்கொள்ளும்.

(கு. 17.2.29 ; 11 ; 1)

சீர்திருத்தமும், சுயமரியாதையும், சட்டம் கொண்டு வந்து, வாக்கு வாங்கி நிறைவேற்றப் பெற்றுவிடலாம் என்று நினைப்பது ஒரு நாளும் முடியாத காரியம்.

(கு. 27.10.29 ; 9 ; 3)

மேல்நாட்டானுக்குப் பொருளாதாரத் துறையில் மாத்திரம் சுயமரியாதை வேண்டும் ; நமக்கு மதம், சமூகம், கல்வி, அறிவு, ஆராய்ச்சி, கைத்தொழில், அரசியல், பொருளாதாரம் முதலான பலதுறைகளிலும் சுயமரியாதை வேண்டும்.

(கு. 13.4.30 ; 9 ; 2 ம.)

தற்போது நம் மக்களுக்கு வேண்டியது படிப்புமட்டும் அல்ல, அறிவும் வேண்டும், சுயமரியாதை வேண்டும், தன் மான உணர்ச்சியும், எதையும் பகுத்துணரும் திறனும், ஆராய்ந்து அறியும் அறிவும்தான் மிகவும் தேவை.

(வி. 3.4.56 ; 3 ; 1—2)

மனிதன் உலகில் தன் சுயமரியாதையை—தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ளவேண்டும்.

(வி . 20.9.62 ; பெ. செ)

மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மான மற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்.

(கு. 10.5.36 ; 11)

சமுதாயச் சீர்திருத்தம்

சாதி வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும்; மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

(கு. 9.12.28 ; 11 : 3)

சமூகச் சீர்திருத்தம் அரசியலைவிட்டுத் தனித்திருக்க முடியாது. அரசியல் சீர்திருத்தமும் சமூகத்தைவிட்டுத் தனித்திருக்க முடியாது. மனித சமூகத்துக்காகத்தான் அரசியல் நடக்கிறது. அரசியல் காரியம் ஒவ்வொன்றும் சமூக நலனைப் பொறுத்ததே ஒழிய வேறில்லை. அரசியல் சட்டமும் பாதுகாவலும் சமூகத்துக்காகவும் சமூக நலனை அனுசரித்தும் செய்யப்பட்டதே தவிர வேறில்லை.

(கு. 16.5.37 ; 11 : 2)

உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழவேண்டுமானால்—பிச்சை கொடுப்பதும், பிச்சை எடுப்பதும் சட்ட விரோதமான காரியமாய்க் கருதப்பட வேண்டும். அப்படியானால்தான் மனிதன் சுயமரியாதையோடு வாழமுடியும்.

(கு. 21.4.45 ; 2 : 3)

"மூட நம்பிக்கைகளை முறியடிக்கும் துறை" என்பதாக ஒரு துறையை சர்க்கார் ஏற்படுத்தி, அதன் மூலம் பள்ளிகளிலும், பொது இடங்களிலும், மாணவர்களுக்கும், மக்களுக்கும் பிரச்சாரம் செய்ய வகைசெய்தாலொழிய மதக்கேடும், சாதிக்கேடும், சாத்திர புராணக் கேடுகளும் ஒரு நாளும் நமது நாட்டை—சமுதாயத்தை விட்டு ஒழியப்போவதில்லை.

(வி. 23–5–1968 ; 2 : 2)

வலிவுள்ளவனாகவோ, பணக்காரனாகவோ, தந்திரசாலியாகவோ, அயோக்கியனாகவோ இல்லாதவன் வாழ்வதற்கு இந்த உலகத்தில் இடம் இல்லாமல் போய்விட்டது. இவைகளைச் சீர்திருத்த ஒரு காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

(கு. 4.5.30 ; 8)

கோயில்களின்பேரால் இருக்கும் சாதி வித்தியாசத்தை ஒழிக்கவும் கோயில்களின் பேராலுள்ள செல்வங்களெல்லாம் மக்கள் நலத்திற்கு உதவவும் வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

(கு. 19.7.63 : 3)

அநேக காரியங்களில் மற்றவர்களால் நாம் துன்பமும் இழிவும் அடையாமல், நம்மாலேயே நாம் இழிவுக்கும், கீழ் நிலைக்கும் ஆளாகி வருகிறோம். நம்மை நாம் திருத்திக் கொள்ளாமல்—நமக்குள் ஒரு பெரிய மன மாறுதல் ஏற்படாமல்—நமது சமூகம் மாறுதலடைவ தென்பது ஒரு நாளும் முடியாத காரியமாகும்.

(கு.5.4.36 ; 5 : 2)

ஆதிக்கப் பயமுறுத்தல் காட்டியதால் எந்தக் காலத்திலும் எந்தச் சீர்திருத்தமும் தடைப்பட்டுப் போனது கிடையாது என்பதை வரலாறு கூறும். சீர்திருத்தங்கள் நடந்துகொண்டுதான் இருக்கும் ; மக்களும் சமுதாயச் சீர்திருத்தம் அடைந்துதான் வருவர்.

(வி . 16.10.58 ; 1 ; பெ.செ)

சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால் இங்கும் அங்கும் ஏதோ மாறுதல்களைச் செய்வதோ, ஒட்டு வேலை - மேல்பூச்சுவேலை செய்வதோ பயன்தராது. இன்றையச் சமுதாய அமைப்பையே அடியோடு ஒழித்து விட்டுப் புதியதொரு சமுதாய அமைப்பை – சாதியற்ற, உயர்வுதாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.

(வி. 15.5.62; 1)

நாம் அரசியல் துறையில் முன்னேறி மாற்றம் பெற்றிருக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் இன்னமும் பிற்போக்கான நிலையில்தான் இருக்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

(வி.26.8.67; 3:6)

நம்முடைய சமுதாயம் குரங்குப்பிடிச் சமுதாயம்; உலகம் முக்காலே அரைக்கால்வாசி முன்னேற்றம் அடைந்த பிறகும், இது முன்னோர் சொன்னபடி நீண்ட நாளாக நடந்துவந்த பழக்கம் என்றுகூறி, முதுகுப் பக்கம் பார்த்துக் கொண்டு பிடிவாதமாக நடந்து, இன்னும் காட்டுமிராண்டித் தன்மையிலேயே இருக்கிறது.

(வி. 16.11.67; 3:1.)

109/31—4.

நம் மக்கள் சமுதாயமானது பலசாதி, பலமதம், பல பிரிவாக இருக்கிறது. நம் நாட்டிலிருக்கிற மனித சமுதாய பேதம் ஒழியவேண்டும். இதை எவனோ ஒருவன் செய்யட்டும் என்றிருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் நாம் நம் சமுதாயத்திற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று கருதவேண்டும்.

(வி. 21.10.67; 3:1)

நாம் யாரை விரோதித்தாலும், யாரை நேசித்தாலும் நமது கருத்து ஒன்றேயாகும். அதாவது, படித்தவர்கள் என்றும், பணக்காரர்கள் என்றும், அரசாங்கத்தார் என்றும் சொல்லிக்கொண்டு ஏழைகளின் இரத்தத்தை எவரும் உறிஞ்சக்கூடாது என்பதேயாகும்.

(கு. 12.3.33 ; 6 : 4)

நம் சமூகத்தைப்பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப் படாமல் சொந்தச் சுயநலத்திற்காகப் பொதுநல வேடமிட்டுக் கொண்டு இருந்தால் அவர்கள் தமிழர்களாயிருந்தாலும் அவர்களெல்லோரும் தமிழர்களுக்கு எதிரிகளே.

(வி. 30.4.61 ; 1 : பெ செ)

நீ ஒரு ஊரிலே இருக்கிறாய். அந்த ஊரிலே 50 பேருக்கு நரம்புச் சிலந்தி வந்திருக்கிறது. அது எதனால் வந்தது என்று பார்க்கிறாய். அந்த ஊரிலுள்ள கேணியில் நரம்புச் சிலந்திப் பூச்சி இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடிப்பதால்தான் அவர்களுக்கு நரம்புச் சிலந்தி வருகின்றதென்றால் அந்தக் கேணியிலிருக்கிற நீரையெல்லாம் இறைத்துவிட்டுச் சுத்தப்படுத்த வேண்டும். ஊற்றே நரம்புச் சிலந்தியை உண்டாக்கக் கூடியதாக இருந்தால், அந்த ஊற்றையே அடைத்துவிட்டு, வேறு புதுக் கேணி வெட்ட வேண்டும். இல்லை, நான் அந்தத் தண்ணீரைத்தான் குடிப்பேன் என்றால் அந்தநோய்க்கு ஆட்பட்டர்கவேண்டுமே தவிர, அதிலிருந்து தப்ப வழியில்லை. நான் அந்த ஊற்றை அழிக்கும் வேலையில்தான் ஈடுபட்டிருக்கின்றேன்.

(வி. 8.9.68; 3)

ஒரு சமூகமென்றிருந்தால் அச் சமூகத்தில் ஏழைகளில்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலையாகும்.

(கு. 30.1.27; 13 : 3)

சீர்திருத்தங்கள் — மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமையவேண்டும்.

(கு. 9.12.28; 12 : 2)

சீர்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதைமட்டும் வைத்துக்கொள்ளுதலே யாகும்.

(வி. 29.1.56; 2 : 2)

சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறிவதே சீர்திருத்தத்திற்கு உண்மையான பாதையாகும்.

(வி. 23.3.58, 1; பெ.செ)

அந்நியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாய்விடுமே—என்கிற உலக அபிமானமும், பயமும், பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் ஒருகாலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக்குணங்களைக் கொண்டவர்களால் நடைபெறும் எவ்விதச் சீர்திருத்தமும் ஒருகாலமும் பயனளிக்கவே முடியாது.

(வி. 22.3.58 ; 1 ; பெ.செ)

இழிவின் மூலகாரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்து, அவ்விழிவு பின்சந்ததிக்கும் என்றென்றும் திரும்பி வரமுடியாதபடி பரிகாரம் தேடுவதுதான் உண்மையான சீர்திருத்தவாதியின் கடமை.

(வி. 28.2.65 ; 1; பெ.செ)

மதத்தை வைத்துக்கொண்டு, சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று புறப்பட்ட ஒருவர்கூட இதுவரையில் ஒரு சிறிதும் வெற்றிபெற முடியாமலேயே போய்விட்டது.

(கு. 7.4.29. 10; 2)

படித்தவனும், பணக்காரனும், அரசாங்கத்தாரும் பாடுபட்டு உழைக்கும் மக்களுடைய நன்மைக்கும், அம் மக்களுடைய உழைப்பின் பயன் முழுவதும் அம்மக்களே அடையும்படியான காரியத்திற்கும் எதிரிகளாய் இருப் பார்களேயானால், அவர்கள் எல்லோரும் உலகில் இல்லாமல் மறையவேண்டியவர்களே யாவார்கள்.

(கு. 12.3.33; 6; 4)

சமூகக் கொடுமைக்கு அடிப்படையான மதம், சாதி, பழக்க வழக்கம், சாத்திரங்கள், கடவுள், கட்டளைகள் என்பவை தகர்க்கப்படாமல் எப்படிப்பட்ட அரசியல் சீர்திருத்தமேற்பட்டாலும் ஒரு காதொடிந்த ஊசியளவுப் பயனும் பாமரமக்களுக்கு ஏற்படாது.

(கு. 23.6.35; 9; 4)

சமுதாயத்தில் பார்ப்பனர் என்றும் பஞ்சமர் என்றும் பிரிவுகள் இருக்க வேண்டியது அவசியம்தானா? அதற்குக் கடவுள்பொறுப்பாளி என்று கூறப்படுமானால் அக்கடவுளைப் பஞ்சமனும் சூத்திரனும் தொழலாமா?

(வி. 22-1-61; 1 : பெ.செ.)

அறிவியல்

இயந்திரம் கூடாதென்றால் மனிதனுக்கு அறிவு விருத்தி கூடாது என்பதுதான் பொருளாகும்.

(கு. 13·8·33 ; 10 ; 4)

இன்று நாம் எவ்வளவு மாறுபாடு அடைந்துவிட்டோம். நம் வசதிகளும் வாழ்வும் ஏராளமாகப் பெருகி விட்டன. அதற்குமுன் கட்டைவண்டிதான். இன்று ரயில், மோட்டார், ஆகாய விமானம் முதலிய நவீன வசதிகள்; தீ உண்டாக்கச் சக்கிமுக்கிக் கல்லை உராய்ந்தோம்; இன்று ஒரு பொத்தானை அழுத்தினால், ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் எரிகின்றன. வாழ்க்கையில் இவ்வளவு மாற்றமடைந்துள்ள நம் மக்களின் புத்தி மட்டும் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போலவே இருக்கிறதே!

(வி. 2·3·61 ; பெ.செ)

கண்காட்சிச் சாலைகளில், புதிய கற்பனைகள் பல மலர்ந்திருக்கும்: வாழ்க்கை வசதி மேம்பாட்டிற்கான பல புதிய கண்டுபிடிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். பல நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட நுண்ணிய கருவிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருக்கும். கண்காட்சிச் சாலையின் ஒரு பக்கத்தில் நுழைந்து மறுபக்கத்தில் வெளி வருவதற்குள் ஒருவன் சகல துறைகளிலும் தன் அறிவை வளர்த்துக்கொண்டுவிடுவான். அவன் உலகத்தின் முன்னேற்ற வளர்ச்சியைத் தன் கண்முன் கண்டுகளித்துத் தெளிவு பெறுகிறான். பல ஆராய்ச்சி நுணுக்கங்களை அறியும் வாய்ப்புப் பெறுகிறான். பல அதிசயக் கருவிகளைக் கண்டு அக மகிழ்கிறான். சுருங்கக் கூறின் கலாசாலை சென்று பல ஆண்டுகள் படித்துப் பெற வேண்டிய அறிவு வளர்ச்சியை அவன் அந்தக் கண்காட்சி மூலம் ஒரு சில மணி நேரத்திலேயே பெற்றுவிடுகிறான்.

(வி. 13.1·63 ; 2 ; 4)

கொஞ்ச காலத்திற்குமுன் கடவுளைப்பற்றிய கதைகளை அப்படியே, அதாவது கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக்கொண்டிருந்தவர்கள்கூட, இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு, தங்களுக்

குள்ள அறிவு வளர்ச்சியில்லாத தன்மையை மறைத்துக் கொண்டு, விஞ்ஞானத்தின்மூலம் அக்கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டு சிரமப்படுகிறார்கள்.

(கு. 11·8·29 ; 10 ; 2)

சக்கிமுக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து "எடிசன்". அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம்; எனவே மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது.

(பெ. சி. II ; 1120)

உணவுத்துறையில் நம் நாட்டில் பெரிய மாறுதல் ஏற்பட வேண்டும். அரிசிக்குப் பதிலாக வேறு ஏதாவது இரசாயனப் பொருளைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். நாம் எந்திரம் ஓட்டுவதற்கு முதலில் நெருப்பைத் கொளுத்தி நீராவியில் இயங்க வைத்தோம். பிறகு மண்ணெண்ணை, குரூட் ஆயில், பெட்ரோல், மின்சாரம் என்று காலத்திற்கேற்றாற்போல் மாற்றி ஓடச் செய்கிறோம். அதுபோல மனித எந்திரத்தையும் பெருந்தீனி மூலம் ஓடச் செய்யாமல், மின்சாரம் போன்ற சக்திப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்து (சிறிய உணவு) அதைக் கொண்டே மனிதனை இயங்கும்படியும், உயிர் வாழும்படியும் செய்ய வேண்டும்.

(பெ. ஒ. வா. நெ. 8)

மக்கள் பிறப்புக்கூட இனி அருமையாகத்தான் போய் விடும். அது போலவே சாவும் இனிக் குறைந்து விடும். மனிதன் வெகு சுலபமாக நூறு ஆண்டு வாழ முடியும். யாரும் சராசரி என்று இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெற மாட்டார்கள். ஆண் பெண் உறவுக்கும் பிள்ளைப் பேற்றுக்கும் சம்பந்தமில்லாமலே போய்விடும்.

(கு. 30.1.36. 15.)

கல்வி

கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதேயாகும்.

(கு. 29.7.31; 8;1)

எல்லா மக்களுக்கும் கல்வி பரப்புவது, நம் நாட்டில் பொது உடைமைக் கொள்கையைப் பரப்புவது போன்று அவ்வளவு கடினமான காரியமாய் இருக்கிறது.

(கு. 22.11.36; பக்.19)

ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடையவேண்டு மானாலும் அவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல் வாழ்க்கை நடத்தவேண்டுமானாலும் அரசியல், பொரு ளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

(கு. 26.12.37; 10; 31)

கல்வியறிவும் சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

(வி. 71.19. 55; 3 ; 3)

ஆசிரியர்கள் முதலில் மாணவர்களுக்குச் சுயமரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும், சமத்துவத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும். மக்களிடத்தில் அன்பு செலுத்தக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

(கு. 1.5.27; 6;1)

எப்படியிருந்தாலும் புராணப் பண்டிதர்களைப் பொதுமக்கள் ஆதரிப்பது கொள்ளியை எடுத்துத் தலையைச் சொரிந்துகொள்வது போலாகும். ஏனென்றால் அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை. ஆகையால் பண்டிதர்களைக் கிட்டச் சேர்க்கும் காரியத்தில் மிக விழிப்போடு இருக்கவேண்டும்.

(கு. 18.5.30. 14)

ஆசிரியர்கள் பயன்படக்கூடியவர்களாயிருக்க வேண்டுமானால், அவர்கள் ஒரு அளவுக்காவது சுதந்திர புத்தியுள்ளவர்களாகவும், பகுத்தறிவுக்குச் சிறிதாவது மதிப்புக் கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

(கு. 12.2.44 ; பக். 9)

ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் எல்லோரும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம் இவைகளை வளர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

(வி. 5.10.60 ; பெ.செ.)

பெருமைமிக்க ஆசிரியர்கள் நமது பிள்ளைகளை மதவாதிகளாக்க வேண்டுமென்று கருதுவதைவிட, அறிவாளிகளாக்க வேண்டுமென்று பாடுபட வேண்டும்.

(வி. 16.12.69 ; 3 ; 6)

நாட்டில் சாதியின் பேரால் ஒருவன் எதற்காக இழிமகனாகவும், இழிதொழில் செய்பவனாகவும் இருக்க வேண்டும்? நாட்டில் எல்லா மக்களுக்கும் கல்வி அளித்து விட்டால், இழிதொழிலுக்கென்று ஒரு சாதி இருக்க முடியுமா? படிப்பின்மையால்தானே இவர்கள் இழிதொழிலைச் செய்யவேண்டியிருக்கிறது? அதனால்தானே இழிமக்களாகவும் கருதப்படுகின்றனர்?

(வி. 12.6.1961 ; பெ.செ)

சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு நியாயமோ, அதுபோல கல்வி இல்லாதவனுக்குக் கல்விகொடுக்க வேண்டும்.

(வி. 21.7.61 ; 3 ; 4)

இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் கோயிலல்ல; பள்ளிக்கூடம்தான். அறிவால் பல அதிசய அற்புதங்களைச் செய்யலாம். அதனால் அறிவை வளர்ப்பதற்கு அடிப்படையான கல்விக்கூடங்கள்தான் இன்று நமக்கு மிகத் தேவை.

(வி. 6.7.68; 3 ; 5)

நமது கல்விமுறை மாறவேண்டும். படிக்கும்போதே அத்துடன் தொழிலும் பயிலவேண்டும். எந்த வகுப்பில் ஒருவன் படிப்பை நிறுத்தினாலும், அவன் தொழில் செய்து பிழைக்கக் கூடியவனாக இருக்கவேண்டும். மக்கள் அத்தனை பேரும் தொழில் பழகியவர்களாக இருக்க வேண்டும்.

(வி. 26.7.68; 3.1)

பள்ளிக்கூடங்கள் எழுத்து வாசனையையும் எதாவது ஒரு துறையில் விளக்கத்தையும்தான் உண்டாக்க உதவும். வாசகசாலை என்பது பொது அறிவு விளக்கத்தையும் சகல, துறைகளிலும் ஞானத்தையும் உண்டாக்கும்.

(கு. 6.3.38; 8;1)

நாட்டில் பள்ளிக்கூடங்கள், உயர்தரக் கலாசாலைகள் எவ்வளவு இருந்தாலும் ஓரளவுக்குத்தான் அவைகள் மூலம் அறிவு வளரும். யார் அவைகளை நடத்தினாலும் ஒரு கட்டுப்பாட்டுக்கு, ஒரு வரம்புக்கு அடங்கியதே.

இத்தகைய நிறுவனங்களால் படிப்பின்பயன் முழுமை யாகக் கிடைத்துவிடாது. இந்தக் குறைபாட்டை நிறைவு படுத்துவதற்குப் பயன்படுவன படிப்பகங்களேயாகும்.

(வி. 8.1.61; 2; 5)

சுருங்கச் சொன்னால் படிப்பகங்களை ஒரு சர்வகலா சாலை என்றே கூறலாம்.

(கு. 19.7.31; 3)

நம் நாட்டில் கல்வி இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டுவது அவசியம். ஒன்று, கல்வியால் மக்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச் சியும் ஏற்படவேண்டும். மற்றொன்று, மேன்மையான வாழ்வுக்குத் தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்பட வேண்டும்.

(கு. 22.8.37; 10; 3)

படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய்—தொல்லை கொடுக்ாதவனாய்—நாணயமாய் வாழ்வதற்கு.

(வி. 25.1.47 ; 3 : 3)

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு முதன் முதலில் ஒழுங்குமுறையைப் புகட்டுவதில்தான் கவலை வேண்டும். அதுதான் முக்கியம். அடுத்தபடியாக உள்ளதுதான்

109/31—5.

கல்வி. முதலில் எப்படிப் பழகவேண்டும் என்ற நல்லொழுக்கத்தைப் புகட்ட வேண்டும். நல்லொழுக்கம்தான் ஒரு மனிதனைப் பிற்காலத்தில் சிறந்த பண்புடையவனாக ஆக்குகிறது.

(வி. 1.3.56 ; 3 : 3)

நாட்டை நல்ல முறையில் வளப்படுத்த நான் நாட்டின் அதிகாரியாக இருந்தால், அதிக வரி போடுவேன். ஏழைகளிடத்தில் எவ்வளவுதான் கையில் கொடுத்தாலும் அதை உடனே செலவு செய்துவிடுகிறார்கள். ஆகவே அவர்கள்கையில் பணம் கொடுக்காமல் வரியாகப் பிடித்து அவர்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கலாம்.

(வி. 23.7.56 ; 3 ; 5—6)

மூடநம்பிக்கை, ஒழுக்கக்கேடு, சமுதாய இழிவு உள்ள நூல்கள் எவையானாலும் அவை பள்ளியில் மாத்திரமல்லாமல் அரசியலிலேயே புகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(வி. 17.3.68 ; 2 ; 3)

பாரதிதாசன் அவர்களது பாடல்களை வகுப்புக்குத் தகுந்தபடி தொகுத்துப் பாடமாக வையுங்கள் ; ஐந்தாண்டு அறிவு ஓர் ஆண்டில் தோன்றிவிடும்.

(வி. 23.5.68 ; 2)

பெரும்பாலோர் ஞானம் என்பதும், அறிவு என்பதும் கடவுளைக் காண்கிறதும், மோட்சத்தை அடைவதும் தான் என்று நினைக்கிறார்கள். இந்த எண்ணம் குழந்தையிலிருந்தே ஊட்டப்பட்டு வருவதால், மேன்மேலும் ஒரு மாணவன் தெளிவற்றவனாகவே ஆக்கப்படுகிறான்.

மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அருங்குணங்கள் ஒழுக்கம், நாணயம், நேர்மை, மற்றவர்களுக்கு நன்மை பயத்தல், பிறருக்கு ஊறு செய்யாமல் இருத்தல். இவைகள் நமக்குக் கடவுளைவிட மேலானவை.

(வி. 27.9.55 ; 3 : 3)

பிள்ளைகளுக்கு ஒழுக்கம்தான் மிக முக்கியம். அதை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுவதுதான் இன்றியமையாத கடமை.

பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் நல்ல நகைகள், ஆடம்பர உடைகள் உடுத்துவதுதான் பெருமை யென்று கருதாமல் எளிய உடைகளே உடுத்த வேண்டும். படிக்கக்கூடிய இடத்தில் எல்லாப் பிள்ளை களும் கலந்து பழகும்படியான இடங்களில் பேதங்கள் இல்லாமலிருப்பதுதான் நல்லது.

(வி: 5.10.61 ; பெ.செ)

மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் பள்ளியில் படிக்கும் காலத்தை வீணடித்துக்கொள்ளக் கூடாது. பள்ளியில் படிக்கும் காலம் மிகமிக அருமையானது. எனவே வெளியில் நடக்கும் எவ்வித நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் தங்கள் மனத்தை அலையவிடக் கூடாது. குறிப் பாகக் கூறவேண்டுமானால், கிளர்ச்சிகளில் மாணவர்கள் பங்குகொள்ளக் கூடாது.

(வி. 9.4.62 ; பெ.செ)

மாணவர்கள்-மாணவியர் ஆபாசப் படங்கள், கருத் துக்கள் கொண்ட புத்தகங்களை வாங்கிப் படித்து வாழ்க் கையில் கெட்டுப் போகிறார்கள். அறிவுப் பெருக்கம் நிறைந்த நல்ல கருத்துக்கள்கொண்ட புத்தகங்களை வாங்கிப் படித்துச் சிந்தித்து அறிவு ஆராய்ச்சி பெறவேண் டும்.

(வி. 17.5.62 ; பெ.செ)

முதலாவதாக, மாணவர்கள் ஆசிரியருக்குக் கட்டுப் பட்டு நடக்கவேண்டும். அடுத்து, ஒழுங்குமுறை பழக வேண்டும். அதற்கு அடுத்தாற்போல்தான் பாடம்

(வி. 15.7.62 ; பெ.செ)

தமிழ்மொழி

ஒரு நாட்டிற் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றே யாகும். மொழிப்பற்று இராதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய் மொழிப்பற்றுப் பெருக வேண்டும் என்பது எனது பிரார்த் தனை.

(த.த. 7–ஆம் பதிப்பு பக்: 160)

தமிழ்நாட்டில் பிறந்தவர்களுக்கு மொழிப்பற்று அவசியம்! அவசியம்! என்று சொல்லுகிறேன். வங்காளிக்கு வங்கமொழியில் பற்றுண்டு; மராட்டியனுக்கு மராட்டிய மொழியில் பற்றுண்டு; ஆந்திரனுக்கு ஆந்திர மொழியில் பற்றுண்டு; ஆனால், தமிழனுக்குத் தமிழில் பற்றில்லை. தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதவரையில் தமிழர்கள் முன்னேற்றமடையமாட்டார்கள்.

(த. த. 7–ஆம் பதிப்பு பக்:161)

தாய்மொழி என்பதற்காகவோ, நாட்டு மொழி என்பதற்காகவே எனக்குத் தமிழ்மொழியிடத்து எவ்விதப் பற்றும் இல்லை. தமிழ் தனிமொழி என்பதற் காகவோ, மிகப் பழைய மொழி, சிவபெருமான் பேசிய மொழி என்பதற்காகவோ, அகத்தியரால் உண்டாக்கப் பட்டது என்பதற்காகவோகூட எனக்கு அதில் பற்றில்லை. குணத்திற்காகவும், குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காக வும்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக்கூடும். எனது மொழி, எனது தேசம், எனது மதம் என்பதற்காக வோ, என்னுடையது பழமையானது என்பதற்காகவோ ஒன்றை நான் பாராட்டுவதில்லை.

நான் தமிழினிடத்தில் அன்பு வைத்திருக்கிறேன் என்றால் அதன்மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையையும் அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பு ஏற்படும் அளவையும் உத்தேசித்தே நான் தமிழினிடத்து அன்பு செலுத்துகிறேன்.

(த. த. 7–ஆம் பதிப்பு பக். 204–205)

எனது நாடு எனது இலட்சியத்திற்கு உதவாது என்று கருதினால், உதவும்படி செய்ய முடியாது என்று கருதினால் உடனே விட்டுவிட்டுப் போய்விடுவேன். அதுபோலவே, எனது மொழி என்பதானது எனது இலட்சியத்திற்கு-என்னுடைய மக்கள் முற்போக்கு அடைவதற்கு—மானத்தோடு வாழ்வதற்குப் பயன்படாது என்று கருதினால் உடனே அதை விட்டுவிட்டுப் பயனளிக்கக்கூடியதைப் பின்பற்றுவேன்.

(த. த. 7–ஆம் பதிப்பு பக்.205)

மற்றொரு மொழி நமது நாட்டில் புகுத்தப்படுவதைப் பார்த்து அதனால், நமக்கு ஏற்படும் இழப்பை அறிந்து சகிக்கமுடியாமல்தான் எதிர்க்கிறேனே யொழியப் புதியது என்றோ, வேறு நாட்டினது என்றோ நான் எதிர்க்கவில்லை.

(த. த. 7–ஆம் பதிப்பு பக். 205.)

தமிழ் இந்தநாட்டு மக்களுக்குச் சகல துறைக்கும முன்னேற்றம் அளிக்கக் கூடியதும், சுதந்திரத்தை அளிக்கக் கூடியதும், மானத்தோடும் பகுத்தறிவோடும் வாழத்தக்க வாழ்க்கை அளிக்கக் கூடியதும் ஆகும் என்பது எனது அபிப்பிராயம். ஆனால், அப்படிப்பட்டவை யெல்லாம் தமிழிலே இருக்கிறதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லை என்றாலும் மற்ற அநேக இந்திய மொழிகளைவிட அதிகமான முன்னேற்றத்தை அளிக்கக்கூடிய கலைகள், பழக்கவழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என்று அறிகிறேன். ஆதலால், தமிழுக்குக் கேடு உண்டாக்கும் எனச் சந்தேகப்படத்தக்க வேறு எந்த மொழியும் விரும்பத் தகாததே யாகும்.

(த.த. 7-ஆம் பதிப்பு பக். 205)

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவை தமிழேயாகும். மலையாள பாகத்தில் பேசும் தமிழ் மலையாளம் என்று சொல்லப்படுகிறது; கர்னாடகத்தில் பேசும் தமிழ் கன்னடமாக ஆகிவிட்டது; ஆந்திர பாகத்தில் பேசும் தமிழ் தெலுங்காக ஆகிவிட்டது. நால்வரும் பேசுவது தமிழ் மொழிதான்.

(கு. 2.2.46; 3:3)

பண்டிதர்களில் சிலர், ''தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை; ஒரே தாய் வயிற்றில் பிறந்த நான்கு அக்காள் தங்கைகள்'' என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து. திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள் தான். அது தமிழ்தான். அந்த ஒன்றைத்தான் நாம் நான்கு பெயரிட்டழைக்கின்றோம். நான்கு இடங்களில் பேசப்படுவதால் நான்கு பெயரில் வழங்குகிறதே யொழிய நான்கு இடங்களிலும் பேசப்படுவது தமிழ் ஒன்றுதான்.

(வி. 6. 12. 47; 3;4)

மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதும் அறிவையும் திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் உணர்ச்சியாகும்.

(பெரியார் 99-வது பிறந்த நாள் மலர், பக். 63)

எழுத்துச் சீர்திருத்தம்

எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முந்திய பதிப்புகளிலும் எழுத்துக்களிலும் "ஈ" என்கின்ற எழுத்தானது "இ" எழுத்தையே மேலே சுழித்த வட்டவடிவத்தில் இருந்து வந்திருக்கிறது.

இன்னும் 400, 500 ஆண்டுகளுக்கு முந்தின "கல் எழுத்துக்கள்" அநேகம், வேறு வடிவத்தில் இருந்து வந்திருக்கின்றன.

அதுபோலவே, இப்போதும் சில எழுத்துக்களை மாற்ற வேண்டியதும் சில எழுத்துக்களைக் குறைக்க வேண்டியதும், சில குறிகளை மாற்றவேண்டியதும் அவசியம் என்றும், அனுகூல மென்றும்பட்டால் அதைச் செய்யவேண்டியது தான் அறிவுடைமை.

(பெ. சி. 11 ; 959)

ஒரு மொழியோ, ஒரு வடிவமோ எவ்வளவு பழையது— தெய்விகத் தன்மை கொண்டது என்று சொல்லிக் கொள்ளுகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றைச் சீர் திருத்த வேண்டிய அவசியமிருக்கின்றது என்பது அதன் உண்மைத் தத்துவமாகும்.

(கு. 20–1–35 ; 10; 1)

புதிய மாறுதல்களால், அதாவது போக்குவரத்து வசதியின் காரணத்தால் ஏற்பட்ட பலதேச மக்கள் கூட்டுறவாலும், பல தேச மொழிச் சொற்களும் பலதேசப் பொருள்களும் கவரும்படி ஏற்பட்ட சம்பவங்களாலும் இன்று அநேக வார்த்தைகள் உச்சரிப்புகள் தமிழில் சர்வசாதாரணமாய்க் கலந்துவிட்டன. அவைகளை உச்சரிக்கும்போதும், எழுதும்போதும் தமிழ் மொழியும் தமிழ் எழுத்தும் விகாரமாய், வெட்கப்பட வேண்டிய தன்மையில் இருக்கின்றன. ஆதலால், சில எழுத்துக்களை வேறு மொழிகளில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதுகூட மிக அவசியமாகும். அதற்கு வெட்கமாய் இருக்குமானால் புதியதாகவாவது, எழுத்துக்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

(கு. 20–1–35; 11; 4)

எல்லா உயிர்மெய் எழுத்துக்களுக்கும் ஆ. காரம் ஏ. காரம் ஆகிய சப்தங்களுக்கு ா, ே, ஆகிய குறிப்புகளைச் சேர்த்து எப்படி கா, கே என்று ஆக்கிக் கொள்ளுகின்றோமோ அதுபோலவே, கி, கீ, கு, கூ முதலிய சப்தங்களுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்பது மிகவும் யோசிக்கத் தக்கதாகும்.

(கு. 20–1–35; 11:1)

உயிரெழுத்துக்கள் என்பவைகளில் ஐ, ஔ என்கின்ற இரண்டு எழுத்துக்களும் தமிழ் மொழிக்கு அவசியமில்லை என்பதே எனது வெகு நாளைய அபிப்பிராயமாகும். ஐ காரம் வேண்டிய எழுத்துக்களுக்கு ''ை'' இந்த அடையாளத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக ''ய்'' என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால் ஐகார சப்தம் தானாகவே வந்துவிடுகின்றது.

(கு. 20–1–35;11:2)

எழுத்துக்களை உருவம் மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது புதிய எழுத்துக்களைச் சேர்ப்பது என்பது போலவே சில எழுத்துக்களை அதாவது அவசியமில்லாத எழுத்துக்களைக் குறைக்க வேண்டியதும் அவசியமாகும்.

(கு. 20–1–35; 11:2)

மொழியின் பெருமையும், எழுத்துக்களின் மேன்மையும், அவை எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும், கற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருப்பதைப் பொறுத்ததே ஒழிய வேறில்லை.

(கு. 20–1–35: 11:3)

தமிழினிடத்தில் ஒருவன் அபிமானியாக இருந்தாலே அவன் தேசத்துரோகி, வகுப்புவாதி, பிராமணத் துவேசி என்றெல்லாம் ஆகி விடுகிறான். தமிழின் பரிதாப நிலைக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? தமிழ் மொழியின் எழுத்தில் ஒரு சிறு மாற்றமோ முற்போக்கோ செய்யக்கூட ஒரு தமிழ் அபிமானியும் முயற்சிப்பதில்லை. யாராவது முயற்சித்தாலும் ஆதரவளிப்ப தில்லை. தற்கால நிலைக்குத் தமிழ் வரிவடிவத்தைப் போதியதாகவும், சௌகரியமுள்ளதாகவும் ஆக்க யார் முயற்சித்தார்கள்?

(கு. 26–1–46; 2;2)

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களை எடுத்துக் கொண்டால், எல்லாம் காட்டுமிராண்டிக் காலத்து எழுத்துக்கள் தான். எத்தனை சுழி? எத்தனை கோடு? எத்தனை மேல் இழுப்பு? எத்தனை கீழ் இழுப்பு? இந்தக் காலத்திலா எழுத்தில் இத்தனை தொல்லை? சாதாரணமாக இந்தக் காலத்தில் இத்தனை எழுத்துக்கள் எதற்காக இருக்க வேண்டும்? நமக்கு எதற்காக 216 எழுத்துக்கள்? உலகிலேயே உயர்ந்த அதிசய அற்புதம் எல்லாம் பண்ணுகிறானே வெள்ளைக்காரன், அவனுடைய மொழியான ஆங்கில மொழியில் அவன் 26 எழுத்துக்களைத்தானே கொண்டிருக்கிறான்? அந்த 26 எழுத்துக்களை வைத்துக் கொண்டு அவன் உலகத்தையே புரட்டுகிறானே.

(வி. 11.5.62; 2;3)

இலக்கியம்

மதம், கடவுள் சம்பந்தமற்ற—யாவருக்கும் பொதுவான இயற்கை ஞானத்தைப் பற்றிய இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத விஞ்ஞானத்தைப் பற்றிய இலக்கியம் ஆகியவைகள் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மையடைய முடியும் என்பது மாத்திரமல்லாமல், அதைக் கையாளும் மக்களும் ஞானமுடையவர்களாவார்கள்.

(வி. 26.1.36; 6;1)

எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அதன் மதிப்பு, அந்த நூலின் பயனை அளவாகக் கொண்டதே ஒழிய, அதை ஆக்கியவனையோ, அதில் உள்ள தெய்விகத் தன்மையையோ, இலக்கண இலக்கிய அளவையையோ, அமைப்பையோ, அற்புதத் தன்மையையோ அளவாகக் கொண்டது ஆகாது.

(வி. 13.1.51; 3;6)

இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.

(வி. 25.2.56 ; 3 ; 5)

இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்கவேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல் மனித சமுதாய வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும் என்பது எனது கருத்து.

(வி. 24.11.61; 3;3)

நம் மக்களிடம் நிரம்பியிருக்கும் மடமை, மானமற்ற தன்மை, இழிநிலை, அறிவற்ற தன்மை இவைகளைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தின்மீதே "இலக்கிய மறுமலர்ச்சி" பற்றிச் சிந்திக்க வேண்டும்.

(வி. 20.4.65; 3;4)

திருக்குறள்

திருவள்ளுவரின் குறளை மெச்சுகிறார்களே ஒழிய, காரியத்தில் அதோடு, அதற்கு நேர்விரோதமாக கீதையைப் போற்றுகிறார்கள்.

(கு. 2.6.35 ; 11 ; 4)

அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும் இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களைக்கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

(கு. 13.11.48 ; 3 ; 1)

குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

(கு. 13.11.48 ; 13 ; 1)

மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி யூட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவே தான் எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் ''எங்கள் குறள்'', ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

(கு. 13.11.48 ; 14 ; 2)

ஆரியக் கலை, பண்பு, ஒழுக்கம், நெறி முதலியவை யாவும், பெரிதும் தமிழர்களுடைய கலை, பண்பு, நெறி, ஒழுக்கம் முதலியவைகளுக்குத் தலைகீழ் மாறுபட்டதென்பதும் அம் மாறுபாடுகளைக் காட்டவே சிறப்பாகக் குறள் உண்டாக்கப்பட்டது என்பதும் எனது உறுதியான கருத்தாகும்,

(வி. 10.1.49 ; 1;4)

வள்ளுவரையும் நாம் ஒரு மனிதனாக மதித்தே—மக்களிடையே காணப்படும் இழிவு நீங்கி மனிதத் தன்மை வளர்ந்தோங்க வேண்டும் என்ற கருத்தோடு பாடுபட்ட ஒரு பெரியாராக மதித்தே குறளை ஒப்புக்கொள்கிறோமே ஒழிய, அதை நாம் கடவுள் வாக்காகவோ அசரீரி வாக்காகவோ ஏற்றுக் கொள்ளவில்லை.

(வி. 20.2.50 ; 3 ; 1)

கம்பராமாயணத்தில் 100 பாட்டும், கந்தபுராணம் அல்லது பெரிய புராணத்தில் 200 பாட்டும் படிப்பதைக் காட்டிலும் திருக்குறளில் 10 பாட்டுப் படிப்பது எவ்வளவோ அறிவூட்ட வல்லது.

(வி. 2.4.50 ; பெ. செ)

நீங்கள் என்ன சமயத்தவர் என்று கேட்டால் ''வள்ளுவர் சமயம்'' என்று சொல்லுங்கள் ; உங்கள் நெறி என்னவென்றால் ''குறள் நெறி'' என்று கூறுங்கள்; அப்படிச் சொன்னால் எந்தப் பிற்போக்குவாதியும், எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரனும் எதிர் நிற்கமாட்டான். யாரும் குறளை மறுக்க முடியாததே இதற்குக் காரணம்.

(வி. 18.4.50 ; பெ. செ)

மூடநம்பிக்கை யொழிந்து அறிவு செம்மைப்படத் திருக்குறள் செம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே திருக்குறள் கல்வி, அறிவு என்றாலே திருக்குறள் அறிவு என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது.

(வி. 19.11.61 ; பெ. செ)

குறளாசிரியர் கடவுளையும் மோட்ச நரகத்தையும் ஒத்துக் கொள்ளவில்லை. குறளில் நீங்கள் அறம், பொருள், இன்பம் என்ற அளவில்தான் காண முடியுமே தவிர, ''வீடு'' ''மோட்சம்'' பற்றி அவர் கூறி இருப்பதாக இல்லை.

''கடவுள் வாழ்த்து'' என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அதில் உருவ வணக்கக் கொள்கைகள் இடம் பெறவில்லை.

மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டு வதற்காகத்தான் வாழ்வின் நெறியை, நிலையை உணர்த்து வதற்காகத்தான் எட்டு, ஒன்பது கருத்துக்களை வைத்து வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

(வி. 29.5.50 ; 3 ; 3)

குறள் பக்தி நூலல்ல ; கடவுளைக் காட்டும் எந்த விதமான மத நூலும் அல்ல; மதப் பிரச்சாரம் செய்யும் மதக் கோட்பாட்டு நூலும் அல்ல....உண்மையான ஒழுக் கத்தை அதாவது, யாவருக்கும் பொருந்தும் சமத்துவமான ஒழுக்கத்தைப் போதிப்பதற்காகவே இருக்கின்றது.

(வி. 13.1.51 ; 3 ; 5—6)

அறிவு பெற்றவன், அறிவையே முதன்மையாகக் கொண் டவன், ஆலோசித்துப் பார்க்கும் ஆராய்ச்சித் தன்மை கொண்டவன் எவனும் குறளை மதித்தே தீருவான்; குறளைப் பாராட்டியே தீருவான் ; சிறிதாவது பின்பற்றிக் குறளை வழிகாட்டியாகக் கொண்டே தீருவான்.

(வி. 13.1.51 ; 3 ; 6)

குறள் வெறும் ஒழுக்கத்தையும், வாழ்க்கைக்கு வேண்டிய அனுபவபூர்வமான பிரத்தியட்ச வழியையும் கொண்ட தாகும்.

(வி. 13.1.51 ; 3 ; 6)

குறள் ஒரு அறிவுக் களஞ்சியம். பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.

(வி. 1. 12. 55 ; 4; 5)

கலைகள்

''தமிழ்நாட்டில் தமிழ்ப் பாட்டுக்கள் பாடப்பட வேண்டும் : தமிழில் இசை இருக்க வேண்டும்''—என்று கூறுபவர்களை நையாண்டிசெய்து, அவ்வாறு கூறுவதும் கோருவதும் முட்டாள்தனம் என்று மேடைகள் மீதேறிப் பேசிடத் துணிவுகொண்ட கூட்டத்தினருக்கும் இத்தமிழ் நாடு இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறது.

(கு. 25.12.1943; 8; 1—2)

நல்ல தமிழில்—இயற்கை எழில்களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதி நெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழியின் ஆர்வத்தையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுக்களையே பாடுமாறு செய்தல் வேண்டும்.

(கு. 25.12.1943; 9; 2)

நாடகங்களிலே இரண்டு விதமுண்டு. ஒன்று பாட்டாக நடத்திக் காண்பிப்பது; மற்றொன்று வசன ரூபமாய் நடத்திக் காண்பிப்பது. வசன ரூபமாய்க் காண்பிப்பவைகளையே மக்கள் விரும்புகிறார்கள்.

(கு. 19. 7. 1936 ; 5 ; 3)

நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு 'பெரிய புரட்சியாளர்' என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நாடகத் துறையிலும் கதைத் துறையிலும், இசைத் துறையிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்படுத்தி இருக்கிறார் அவர்.

(கு. ; 9.9.1944 ; 3 ; 1)

நாடகப் புரட்சி உலகைப்பற்றிச் சரித்திரம் எழுதப் பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ். கிருஷ்ணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரமே தீண்டப் படாததாக ஆகிவிடும்.

(கு. 11.11.1944 ; 4 ; 1)

நாடகக்கலை மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் இருக்க வேண்டும். நாடகம் என்றால் அறிவீனமான, மூட நம்பிக்கையான கருத்துக்களுக்கு இடம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதோடு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவகையில் — முன்னேற்றத்திற்கேற்ற வகையில் இருக்க வேண்டும்.

(வி. 13.11.1969 ; 3 ; 3)

நாடக உலகமானது இதுவரை இருந்தது போலவே இல்லாமல் உண்மையிலேயே மனித சமூகத்திற்குப் பயன் படக்கூடியதாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பி, கொடுமையும், பட்சபாதமும் நிறைந்த உலகத்தை அன்பும் சமத்துவமும் கொண்ட உலக மாகச் செய்ய உதவிபுரிய வேண்டுமென்று ஆசைப்படு கிறேன்.

(பெ. II ; 1281)

தமிழர்களின் தன்மானத்தை வளர்ப்பதற்கும், தமிழர்களுக்கு அறிவூட்டுவதற்கும், தமிழர்கள் மனிதத் தன்மை அடைவதற்கும் பயன்படாத, இயலோ, இசையோ, நடிப்போ எதற்காக வேண்டும்? அது என்ன மொழியில் இருந்தால்தான் என்ன?

(கு. 22. 1. 1944 ; 9 ; 2)

எப்படிப்பட்ட கலையும், ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக்கூடாததாய் இருக்க வேண்டும்.

(கு. 22.5.1948 ; 14 ; 2–3)

கூட்டுறவு

கூட்டுறவு வாழ்க்கை பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது, எவ்வாறு உதவி செய்வது என்பதை இலட்சிய மாகக் கொண்டதேயாகும்.

(கு. 12.11.33; 3; 4)

நாம் செலவழிப்பதில் வகைதகையற்ற முறையில் வீண் செலவு செய்து வருகின்றோம். கூட்டுறவு முறையில் நமது வாழ்க்கையை நடத்தினால், இன்றைய நமது செலவில் எட்டில் ஒரு பாகம்தான் செலவு ஏற்படும். பாக்கி இன்னும் ஏழு பேருக்கு உதவக் கூடியதாயிருக்கும். நம் நாட்டு நிலைமைகளை மாற்றியமைக்காவிட்டால் நம் வாழ்வு விரைவில் அதோகதியாகிவிடுமென்பது நிச்சயம்.

(கு. 12.11.33; 17; 2)

நமது உடலில் பழைய தனிமைத் தத்துவ இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்கிற இரத்தத்தைப் பாய்ச்சவேண்டும்.

(கு. 12.11.33; 18;23)

மனிதன் பகுத்தறிவுள்ள காரணத்தால்தான் தன் சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்கென்று பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறான். அத்திட்டங்களை நிறைவேற்றத் தனி மனிதனால் முடியாது. அதற்கு மற்றவர் உதவி இருந்தே தீர வேண்டியிருக்கிறது.

(வி. 13.1.61; 1. பெ.செ.)

கூட்டுறவு என்கிற கொள்கை சரியான உயரிய முறையில் நம் நாட்டில் ஏற்பட்டுவிடுமானால் மக்கள் சமூகமே சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வதென்ற ஏக்கமின்றி, திருப்தியுடன் நிம்மதியாக-குதூகலமாக வாழ வழி ஏற்பட்டு விடும்.

(வி. 24.4. 61; 1; பெ.செ.)

பொருளாதாரம்

கடவுளுக்கு நன்றி செலுத்தும் முறையிலும் இன்னும் மேன்மேலும் செல்வம் பெருக வேண்டும் என்பதற்காக விண்ணப்பம் போட்டு, லஞ்சம் செலுத்தும் முறையிலும் செல்வத்தைப் பாழாக்குகிறார்கள். இதன் பயனாகவே இந்த நாட்டில் ஆண்டொன்றுக்குப் பல கோடி ரூபாய் பாழாவதைப் பார்க்கலாம்.

(கு. 5.7.31 : 15)

நம் பொருளாதார ஏற்றத்தாழ்விற்குக் காரணமே கடவுள், மதம், சாத்திரம்தான். எப்படி என்பீர்கள். நீ எப்படிப் பணக்காரன் ஆனாய் என்று ஒருவனைக் கேட்டால், அவன் என்ன சொல்லுகின்றான்? எனது சாமர்த்தியத்தால் சம்பாதித்தேன் என்று சொல்வது கிடையாது. கடவுள் அருளால் கிடைத்தது என்கிறான். லட்சுமி கடாட்சம் என்கிறான். அதை மற்றவனும் நம்புகிறான்.

(வி. 6.10.68 ; 36)

மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீரவேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமாகும்.

(பெ. பொ. 15)

செல்வம் (பணம்) தேட வேண்டும் என்று கருதி அதில் இறங்கியவனுடைய வேலை அவனது வாழ்நாள் முழுவதையும் கொள்ளை கொண்டு விடுகிறது. பணம் சம்பாதிப்பதில் போட்டி, பணக்காரன் என்று காட்டிக் கொள்வதில் போட்டி, அதற்கேற்ற புகழ் சம்பாதிப்பதில் போட்டி. இத்யாதி போட்டிகள் அவனது ஊக்கத்தை யெல்லாம் கொள்ளை கொண்டுவிடுகின்றன.

(கு. 8.3.36 ; 12 ; 3)

நான் ஒரு நிமிடம் அரசனாய் இருந்தாலும் முதல் முதல் திருமணம் முதலிய பலவகைகளில் ஏற்படும் பொருள் விரயத்தைத் தடுக்கத் தூக்குத் தண்டனை

நிபந்தனையுடன் சட்டம் செய்வேன். பொருள் நட்டம் தான் இன்று இந்தியாவைப் பிடித்த பெரும் பிணி என்று சொல்லுவேன்.

(கு. 13.12.36 ; 10 : 4)

வரவுக்கும் மேலாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுத்திக் கொண்டு துன்பப்படுபவர்கள் நாணயமாய் வாழ முடியாமல் நாட்டுக்குத் தொல்லை விளைவிப்பவர்கள்.

(கு. 19.9.37 ; 9 : 4.)

இன்றைய அமைப்பில் கையில் காசில்லாவிட்டால் மனிதன் பெரிதும் யோக்கியனாகக்கூட நடந்துகொள்ள முடியாது. மனிதன் துரோகி, நம்பிக்கை மோசக்காரன், அயோக்கியன் ஆவதற்குக் காசில்லாக் கொடுமையும், காசு ஆசையும்தான் காரணம். ஆனதால் நல்ல முறையில் கொஞ்சக் காசு சம்பாதித்தாலும் அதைப் பத்திரப்படுத்தி வைத்தால் சிரமப்படவோ தவறாக நடந்துகொள்ளவோ வேண்டியதில்லை.

(வி, 12.7.55 ; 3 : 2)

இந்தியாவின் பொருளாதார நிலையைப்பற்றிக் கண்ணீர் வடிக்காத அரசியல்வாதிகள் கிடையாது. அது உண்மையாய் இருக்குமானால் திருமணம் போன்ற நிமிட காரியத்துக்காக 4 வரி ஒப்பந்த வார்த்தைக்காக ஆயிரக் கணக்காகவும் பதினாயிரக் கணக்காகவும் செலவழிக்க அனுமதிக்கப்படலாமா ?

(வி. 6.10.62 ; பெ. செ.)

செல்வம் என்பது உலகின் பொதுச் சொத்து. அதாவது மக்கள் அனைவரும் அனுபவிக்க உரிமையுள்ள சொந்தமான சொத்தாகும். அதை யார் உண்டாக்கியிருந்தாலும் உலகத்தில் உள்ளவரை, எவருக்கும் அது பொதுச் சொத்தாகும். அனுபவிக்கும் உரிமைபோல அதை அழியாமல் பாதுகாக்கவும் உரிமை உண்டு.

(வி. 17:3.65 ; பெ. செ)

லேவாதேவி என்பது ஒரு கொடுமையான தொழிலேயாகும். அதற்கு வேறு பெயர் சொல்ல வேண்டுமானால் சட்டப்படி கொடுமைப்படுத்திக் கொள்ளையடிப்பதேயாகும்.

(கு. 27.8.33 : 11 : 1)

எனக்கு, முதலாவது இன இழிவு நீக்கம் முக்கியம். அடுத்தது பொருளாதார பேதம் நீக்கம். ஏனென்றால் இந்நாட்டு நிலைமை அது.

(தி.வி.தெ : 13)

சர்க்காரின் வரவு செலவுத் திட்டம், குடும்பத்தினர் செய்வது போன்றதல்ல. குடும்பத்தினர் வரவுக்குத் தக்கபடி செலவுத் திட்டம் வகுக்க வேண்டும். சர்க்காரோ மக்கள் நலத்துக்குத் தேவைப்பட்டவைகளைக் கணக்குப் பார்த்து அதற்கேற்ப வருவாய் தேடும் வகையில் வரிகளை நிர்ணயித்துத் திட்டம் அமைக்க வேண்டும்.

(வி.12.2.63 : 2 பெ.செ)

நாளுக்கு நாள் மக்களிடம் ஒழுக்கம், நாணயம், யோக்கியப் பொறுப்பு ஆகிய தன்மைகள் இல்லாத போக்கு உச்ச நிலையடையும் வகையில் மனித சமுதாயம் சென்று கொண்டிருக்கிறது. சொத்துரிமை இல்லாமல் தடுப்பதே இதற்குப் பரிகாரமாகும்.

(வி. 11. 12. 67; 1 : 1)

மனிதனுக்குச் சுயநலமும் புகழ் ஆசையும் இல்லாமல் இருக்காது என்பது ஓர் அளவுக்கு உண்மைதான். ஆனால், அதற்குச் சாதனம் செல்வம் சேர்ப்பது என்பது இயற்கையாய் ஏற்பட்டதல்ல.

(கு. 8. 3. 36 : 18 : 1)

119808

சமதர்மம்-பொதுவுடைமை

எல்லோருக்கும் போதுமான அளவு ஆகாரம் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

ஒருவனும் தன் தேவைக்குமேல் எடுத்துக்கொள்ளா விட்டால், எல்லோருக்கும் வேண்டியது கிடைக்கும்.

(கு. 16. 11.30: 7)

சகல தொழிற்சாலைகளும், சகல தொழிற்சாலை நிர்வாகமும், தபால், தந்தி, ரயில், குளம், ஏரி, வாய்க்கால் நிர்வாகம்போன்று சர்க்காருடையதாகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய, தனிப்பட்ட முதலாளி ஒருவன்கூட நம் நாட்டில் இருக்கக்கூடாது. எந்தத் தனிப்பட்ட மனிதனும் நமக்குக் கூலி அளப்பவனாய் இருக்கக்கூடாது.

(வி. 11.12.47 ;4:2)

இன்றைய உலக நிலை—அதாவது மக்களுக்கு உள்ள தொல்லைகள், துயரங்கள், மக்களை மக்கள் ஏய்த்து வஞ்சித்தல் ஆகியன ஒழிந்து, மக்களுக்குச் சாந்தியும் திருப்தியும் ஏற்பட வேண்டுமானால், பொதுவுடைமைத் தத்துவ ஆட்சி ஏற்பட்டே ஆக வேண்டும். இதில் ராசிக்கு இடமே இல்லை. ஆனால் நம் முயற்சியில், பாமர மக்களுக்கு இம்சையும், நாச வேலையும் சிறிதும் இல்லாமல் இருக்க வேண்டும்.

(வி. 5.5.50 ; பெ.செ)

பொருளாதாரச் சமத்துவம் வேண்டுமென்பது எனது கொள்கையாய் இருந்தாலும், மக்களே மக்களிடமுள்ள பொருளைக் கவரும்படிச் செய்வது பொருளாதார பேதத்தைவிடக் கேடான காரியமாகும். ஆதலால் சட்டம் செய்து, சர்க்காரே பங்கிட்டுக் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும்.

(வி. 30.3.68 ; 2,3.)

நிலம் முழுவதும் ஏராளமாக ஒரு மனிதன் வசம் தேக்கப்பட்டிருக்கக்கூடாது. அனைவருக்கும் அவரவர்கள் அளவுக்குப் பிரித்துக் கொடுக்கும் காலம் வரும். அந்தப்படியான காலத்தை விரைவில் ஏற்படுத்த நம்மால் முடியாவிட்டாலும் நாம் வழிகாட்டிகளாயிருக்கவேண்டும்.

(தி.வி.தொ. 16)

கவலையற்ற—பேதமற்ற நிலை ஏற்படவேண்டுமானால், யாவரும் ஒரு நிலையில் இருக்கத்தக்க சமதர்ம நிலை உருவாக வேண்டும். இந்தச் சமதர்ம நிலை உருவாவதற்கு முதலில் சொத்துரிமையை ஒழித்தாக வேண்டும். உடைமைகள் எல்லாம் பொதுவாக ஆக்கப்பட வேண்டும்.

(பெ.ஓ.வா.நெ. 16)

பாட்டாளிகளின் கவலையும் தொல்லையும் தொலைய வேண்டுமானால், முதலாளித்துவம் என்பது அடியோடு ஒழிந்தே தீரவேண்டும்.

(வி. 7.4.50 ; பெ.செ.)

பொதுஉடைமைக் கொள்கையின் கடைசி லட்சியம், உலகம் பூராவும் ஒரு குடும்பம்— உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள்— உலகத்தில் உள்ள செல்வம், இன்பம், போக போக்கியம் முதலியவை எல்லாம் அக்குடும்பச் சொத்து— குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோருக்கும் அக்குடும்பச் சொத்தில் (உலகச் சொத்தில்) சரி பாகம் என்பதேயாகும்.

(கு. 10.9.33 ; 10 : 3)

ஏழை மக்களுக்கு உதவி செய்வது என்பது, ஏழைத் தன்மையே மனித சமுதாயத்தில் இல்லாதிருக்குமாறு செய்வதேயொழிய, அங்கொருவனுக்கும் இங்கொருவனுக்கும் பிச்சைச் சோறு போட்டுச் சோம்பேறியாக்குவதல்ல.

(வி. 22.4.50 ; பெ.செ.)

ஒழுக்கம்

பொதுவாழ்வின் பெயரால் ஒழுக்கக் கேடாக, வஞ்சகராக, திருடர்களாக நடப்பவர்களை ஒருநாளும் விட்டு வைக்கக்கூடாது.

(வி. 17.2.61; 3: 3)

மது அருந்துவது சட்ட விரோதம் என்று சொல்லலாம். இலஞ்சம் வாங்குவதும் அதைவிடச் சட்ட விரோதம்தான். இலஞ்சம் வாங்குகிறவர்கள் எல்லோரும் சமுதாயத்தில் தள்ளப்பட்டவர்களாகவும் தண்டிக்கப் பட்டவர்களாகவும் வெறுக்கப்பட்டவர்களாகவும் கருதப் படவேண்டும்.

(வி. 16.2.67; 2: 2)

சமுதாயக் கூட்டு ஒழுக்கம், பச்சாதாபம், நாணயம், நன்றி, நம்பிக்கை முதலியவை மக்களிடையில் பழக்கத்தில் இருக்கவேண்டும், நலம் செய்ய முந்தவேண்டும்; நல்லதை எண்ண வேண்டும்; கெடுதியை எதிர்க்க வேண்டும்; பாதுகாப்பு இல்லாத சமயத்தில் பிறர் பொருளைக் கவராமல் தூய்மையாக நடந்து கொள்ளவேண்டும்.

(த.வி. 19)

அறிவு எவ்வளவோ வளர்ச்சிபெற்று இருக்கிறது என்றாலும், மனித வாழ்வு மிகமிகக் கீழான நிலைக்குப் போய்விட்டது. வஞ்சகத்திற்கும், துரோகத்திற்குமே அன்பு, ஒழுக்கம் என்றும், திருட்டுக்கும் புரட்டுக்குமே நாணயம் என்றும் அகராதியில் விளக்கம் எழுத வேண்டிய நிலைக்கு மனிதன் வந்துவிடக்கூடாது.

(வி. 20.6.56 ; 3 ; 1)

ஒழுக்கப் பிரசாரமும் ஒழுக்க ஈனராய்-துரோகிகளாய் இருப்பவர்களை ஒழிக்கும் பிரசாரமும் செய்யவேண்டியது தான் தனக்கென வாழாதவர்களுக்கு முக்கியமும் முதன்மையுமான கடமையாகும்.

(வி. 20.6.56 ; 3 ; 3–4).

உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவை குறைய வேண்டும். அவசியம் குறைய வேண்டும். தேவையும் அவசியமும் அதிகமாக அதிகமாக நாணயக் கேடும் ஒழுக்கக்கேடும் வளர்ந்துகொண்டுதான் போகும்.

(வி. 22.7.69 ; 3 ; 6–7)

மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

(வி. 30.7.69 ; 2 ; 2)

ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

(கு. 22—12—29 ; 5 ; 3–4).

உங்கள் மனத்தை நீங்கள் பரிசுத்தமாக வைத்துக் கொண்டு தைரியமாய்ப் பேச வேண்டும். பொது வாழ்வில் மானத்தைப் பார்க்காதீர்கள். எவ்வளவு தூரம் உணர்ச்சியோடு உறுதியோடு உங்கள் மனமறிய நீங்கள் குற்ற மற்றவர்களாக நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு துணிந்து தொண்டாற்ற முடியும்.

(கு. 30.9.44 ; 2 : 2).

பிறருக்கு ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்லுவதை விடத் தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

(வி. 20.11.58; பெ. செ.)

மனிதனிடம் சுலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், மாணவப் பருவத்தில்தான் முடியும்.

(வி. 20.3.56; 3;5)

பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவித பேத நிலையும் ஒழிந்த நிலையில் தான் வளர முடியும். ஒழுக்க அடிப்படையே இன்ப வாழ்வு.

(வி. 20.2.68; பெ. செ.)

ஒழுக்கம் என்பது தனக்கும் அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடந்துகொள்ளுவதாகும்.

(கு. 16.11.30:7)

மற்றவர்களிடமிருநது நாம் எதை எதிர் பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்து கொள்ள வேண்டும் ; அதுதான் ஒழுக்கம்.

(வி. 7·2.61; ;1)

பெண் உரிமை

மனிதன் பெண்களைத் தனக்குரிய ஒரு சொத்தாகக் கருதுகிறானேயொழிய தன்னைப் போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள ஓர் உயிர் என்று மதிப்பதில்லை.

(கு. 3.11.79; 8)

பெண்களைப் படிக்கக்கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள் ?

அவர்களுக்கு அறிவு இல்லை, ஆற்றல் இல்லை என்று சொல்லிச் சுதந்திரம் கொடாமல் அடிமையாக்குவதற்காக.

(கு. 16.11.30 ; 7)

பெண்மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது மேல்சாதிக்காரன் கீழ்ச்சாதிக்காரனை நடத்துவதைவிட, ஆண்டான் அடிமையை நடத்துவதைவிட மோசமானதாகும்.

அவர்கள் எல்லாம் இருவருக்கும் சம்பந்தமேற்படும் சமயங்களில் மாத்திரம்தான் தாழ்மையாய் நடத்துகிறார்கள். ஆனால் ஆண்களோ பெண்களைப் பிறவிமுதல் சாவு வரை அடிமையாகவும் கொடுமையாகவும் நடத்துகிறார்கள்.

(கு. 8·2·31 12;2–1)

இந்திய நாட்டில் பெண்கள் சகல துறைகளிலும் தீண்டப்படாத மக்கள் அடைந்துவரும் வேதனையையும், இழிவையும், அடிமைத் தனத்தையும்விட அதிகமாகவே அனுபவித்து வருகிறார்கள்.

(கு. 28.4.35 ; 5 ; 1)

பெண் அடிமை என்பது மனித சமூக அழிவு என்பதை நாம் நினைக்காததாலேயே, வளர்ச்சிபெற வேண்டிய மனித சமூகம் பகுத்தறிவு இருந்தும் நாள்தோறும் தேய்ந்து கொண்டே வருகின்றது.

(கு. 16.6.35; 7 ; 3)

109–31—8

ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதிபெறத் தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால் எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான்.

(வி. 24.6.40; 3:4)

ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி—ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு வீட்டுக்காரி—ஓர் ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை—ஓர் ஆணின் கண் அழகிற்கு ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள்? பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

(கு. 2.1.7.46; 2 : 2)

பெண்மக்கள் அடிமையானது ஆண்மக்களால்தான். ஆண்மையும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்பட்டதாக எல்லா ஆண்களும் கருதுவதும், பெண்கள் அதை உண்மையென்று பரம்பரையாக நினைத்துக் கொண்டிருப்பதும்தான் பெண் அடிமைத்தனம் வளர்வதற்குக் காரணமாகும்.

(வி. 14.2.61; 1 : பெ. செ)

திருமணம் செய்வதற்கு முன்பு பொருத்தம் பார்க்கிறார்களே, அதில் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் சம தோற்றம், சம அன்பு, ஒத்த அறிவு, கல்வி ஒற்றுமை இருக்குமா என்று கருதுவதில்லை. அதற்கு மாறாக நமது பிள்ளைக்கு அந்தப் பெண் தலைவணங்கிக் கட்டுப்பட்டு நல்ல அடிமையாக இருக்குமா என்ற கருத்தில், மாடுகளை விலைக்கு வாங்குவதற்கு என்னென்ன பொருத்தங்கள் பார்க்கிறோமோ அதையேதான் பெண்கள் பிரச்சினையிலும் பார்க்கிறார்கள்.

(வி. 5.4.61; 1 : பெ:செ)

தாலி கட்டுவதென்பது அன்று முதல் அப்பெண்ணைத் தனக்கு அடிமைப் பொருளாக ஏற்கிறான் என்பதும், அப்பெண் அன்று முதல் அந்த ஆணுக்கு அடிமையாகி விட்டாள் என்பதுமான கருத்தைக் குறிப்பதற்குத்தான். இதன் காரணமாகக் கணவன், மனைவியை என்ன செய்தாலும் யாருக்கும் கேட்க உரிமையில்லை. கணவன் தவறான முறையில் நடந்தால் அவனுக்குத் தண்டனையும் கிடையாது.

(வி; 15.4.61; 1 : பெ. செ.)

இன்றையப் பெண் எவ்வளவோ கல்வியும் செல்வமும், நாகரிக அறிவும் கவுரவம் உள்ள சுற்றத்தாருக்குள்ளும், சக வாசத்துக்குள்ளும் இருந்துவந்தும், நிரம்பவும் கர்நாடக முறையில் பட்டிக்காட்டுக் கிராமவாசிப் பெண்களைவிட இளப்பமாய் நடந்து கொள்வதைப் பார்த்தால், நமக்கு எவ்வளவு சங்கடமாய் இருக்கிறது? இப்படிப்பட்ட பெண்கள் வயிற்றில் பிள்ளைகள் பிறந்து, இவர்களால் வளர்க்கப்பட்டால், அவற்றிற்கு மனிதத்தன்மை எப்படி ஏற்படும் ?

(. பெ. சி. I; 187)

நமது பெண்கள் தங்களைப் பிறவி அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

(வி. 22.3.43 ; 3 ; 4)

பெண்களே! வீரத் தாய்மார்களாக ஆக விருப்பப்படுங்கள். நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்களும் மற்ற ஆண்களும் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள்மீது பழி சுமத்தி வருகிறார்கள். அப்பழிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள். எதிர்காலத்தில் "இவள் இன்னாருடைய மனைவி" என்று அழைக்கப்படாமல், "இவர் இன்னாருடைய கணவன்" என்று அழைக்கப்பட வேண்டும்.

(கு. 5.6.48 ; 14 ; 2-3)

கணவனின் அளவுக்கு மீறிய அன்பையும். ஏராளமான நகையிலும் புடவையிலும் ஆசையையும், அழகில் பிரக்கியாதி பெறவேண்டுமென்ற விளம்பர ஆசையையும் பெற்ற பெண்களும், செல்வத்தில் புரளும் அகம்பாவப் பெண்களும் அடிமை வாழ்விலேயே திருப்தி அடைந்துவிடுவார்களே ஒழிய, உலகச் சீர்திருத்தத்திற்குப் பயன்பட மாட்டார்கள்.

(கு. 29·9·40 ; 15; 3)

பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும், அவர்கள் வெறும் போகப்பொருள்தான் என்று ஆண்கள் கருதி நடப்பதற்கும் முக்கியக் காரணமே பெண்கள் ஆபாசமாய்த் தங்களைச் சிங்காரித்துக்கொள்வதேயாகும்.

(வி. 15.6.43 ; 1 :3)

தங்களை நாகரிக நாரீமணிகள் என்று கருதிக் கொள்ளும் பெண்களெல்லாம்கூட நல்ல முறையில் ஆடை அலங்காரம் செய்து கொள்வதையும், நைசான நகைகள் போட்டுக்கொள்வதையும், சொகுசாகப் பவுடர் பூசிக் கொள்வதையும்தான் நாகரிகம் என்று கருதி வருகிறார்களே தவிர—ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ்வதுதான் நாகரிகம் என்பதை உணர்ந்திருக்கவில்லை.

(வி. 11.10.48 ;3: 2)

சாதாரணமாக, ஆரம்ப ஆசிரியர்கள் என்ற பெயரையே யாருக்கு உபயோகப்படுத்தலாமென்றால் முதலில் நமது பெண்மக்களுக்குத்தான் உபயோகப் படுத்தலாம். ஏனெனில், நமது குழந்தைகளுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் அவர்களுடைய தாய்மார்களே. அக் குழந்தை களுக்கு 6, 7 வயதுவரையில் தாய்மார்களேதான் ஆசிரியர் களாக இருக்கிறார்கள்.

(கு. 1.5.27 ; 5: 3)

இந்து மதத்தின் கல்வித் தெய்வமும், செல்வத் தெய் வமும் பெண் தெய்வங்களாயிருந்தும் இந்துமதக் கொள்கை பின்படி பெண்களுக்குக் கல்வியும் சொத்துக்களும் இருக்க இடமில்லையே ஏன் ?

(கு. 3.11.29 : 8)

பெண்களுக்குப் பகுத்தறிவுக் கல்வியும், உலக நடப்புக்கல்வியும், தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ, காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்யவேண்டும்.

(வி. 22.3.43; 4:2)

பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றுள்ளும் சொத்துரிமை இல்லாதது ஒன்றே மிகவும் முக்கியமானதாகும்.

(பெ. சி. I:170)

ஆண்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது மொழிகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம், ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை.

(கு.8.1.28;6:3)

கற்புக்காகக் கணவனின் மிருகச் செயலையும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற கொடுமை ஒழிய வேண்டும்.

(கு.8.1.28;15;1)

பெண்ணுக்குச் சொத்து கூடாதாம், காதல் சுதந்திரம் கூடாதாம். அப்படியானால் மனிதன் தன் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் ரப்பர் பொம்மையா அது ?

(பெ.க. மு.தொ. : 134)

பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கின்ற தத்துவமே தனிஉடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது. ஏன் என்றால், பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவளின் நிலைமை.

(கு.1.3.36;11;3)

நமது இலக்கியங்கள் யாவும் நியாயத்துக்காக— ஒழுக்கத்திற்காக எழுதப்பட்டிருந்தால் பெண்களுக்கு என்னென்ன நிபந்தனை வைத்திருக்கின்றோமோ அவ்வளவு நிபந்தனைகளையும் ஆண்களுக்கும் வைத்திருக்க வேண்டுமல்லவா?

(வி.1.6.68;3:5.)

சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ''ஆண்மை'' க்குத்தான் உரியதாக்கப்பட்டுவிட்டன. ''ஆண்மைக்''குத்தான் அவைகள் உண்டு என்று ஆண் மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் ''ஆண்மை'' நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ''ஆண்மை'' என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலன்றி பெண்களுக்கு விடுதலையில்லை என்பது உறுதி.

(கு. 12.8.1928:10:2)

ஆண் எப்படி வேண்டுமானாலும் திரியலாம்; எவ்வளவு மனைவிகளை வேண்டுமானாலும் மணக்கலாம் என்கின்ற முறையே, விபச்சாரம் என்னும் பிள்ளையைப் பெற்றெடுக்கின்றது.

(கு. 16. 6. 1935 ;8: —2)

மற்றவர்கள், பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும் குடும்பச் சொத்துக் குறையாமல் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியம் என்று கூறுகின்றார்கள். பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம்.

(கு. 6.4.1930 ;10 :9)

பெண்ணைக் கொள்ள ஆணுக்கு உரிமை இருந்தால் ஆணைக் கொள்ளப் பெண்ணுக்கும் உரிமை வேண்டும். ஆணைத் தொழுதெழப் பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால்,பெண்ணைத் தொழுதெழ ஆணுக்கு நிபந்தனை இருக்க வேண்டும்.

(கு. 12–2–1928 ;13 :3)

ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள், பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சிகளே ஒழிய வேறல்ல; எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்குமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா?

(கு. 12.8.28; 10:1:2)

பெண்களை வீட்டுவேலை செய்வது, கோலம் போடுவது, சாணி தட்டுவது, பாத்திரம் கழுவுவது, கும்மியடிப்பது, கோலாட்ட மடிப்பது என்பது போன்ற அடிமைவேலைக்குத் தயார் செய்யாதீர்கள்.

(கு. .3.36;14:3)

இன்று நம்முடைய சமுதாயத்திற்கு இருக்கும் குறைகளுக்கும் அவமானத்திற்கும் நம் மூடநம்பிக்கைகளே பெரிதும் காரணமாகும். அதுவும் நம் தாய்மார்களிடம் இவ்வளவு இருக்குமானால் பிறகு அவர்கள் வயிற்றில் பிறந்த பிள்ளைகளின் நிலை என்னவாகும்? எந்தச் சீர்திருத்தமும் பெண்மக்களிடம் இருந்து வந்தால் அதற்கு வலிவு அதிகம்.

(கு. 27.10.40; 3:3)

இன்றையப் பெண்கள் வெறும் அலங்காரத்தோடு திருப்தியடைந்து விடுகிறார்கள், அல்லது திருப்தி செய்யப் பட்டு விடுகிறார்கள். எனவே இவர்களுக்கு விடுதலை வேட்கை பிறப்பது அரிதாயிருக்கிறது.

(வி. 26.5.58 ; 1 ; பெ. செ.)

குழந்தைமணம் ஒழிந்து, திருமண ரத்து, விதவை மணம், கலப்பு மணம், திருமண உரிமை ஆகியவைகள் இருக்குமேயானால், இன்றுள்ள விபசாரத்தில் 100-க்கு 90 பகுதி மறைந்து போகும்.

(வி. 21.4.50 ; பெ.செ.)

பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம், ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழ முடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக்கின்றாள். அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால் பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதனால் தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழமுடியும் என்பதை ருசுப்படுத்திக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள், ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால் தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழ முடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அன்றியும், அப்பிள்ளை பெறும் தொல்லையால் அவர்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால் அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகி விடுகின்றது. எனவே உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும்,

(கு. 12-8-1928 : 10 : 3)

திருமணம்

மணமக்கள், உயிர் நண்பர்கள் ஒருவருக்கொருவர் பழகும் முறையைப்போல் நடந்துகொள்ள வேண்டும். எதிலும் தான் கணவன் என்ற ஆணவத்தை மணமகன் கொள்ளக்கூடாது. மணமகளும் தான் கணவனுக்கு அடிமைப் பொருள்— அடுப்பூதுவதற்கு என்றே வந்தவள் என்ற எண்ணமில்லாது பழகவேண்டும்.

(வி. 25.3.55 : 3 ; 1)

மணமக்கள் சந்ததி உற்பத்தி செய்வதில் அவசரப்பட்டுவிடக்கூடாது. திருமணம் நடந்து குறைந்தது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னாவது குழந்தை பெறுவதாயின் மிக நல்லதாகும்.

(வி. 7.9.55 ; 1 : 6)

மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் வரவுக்கேற்ற வகையில் செலவு செய்ய வேண்டும். கடன் வாங்கக்கூடாது. வரவு சிறியதாக இருப்பினும் அதிலும் ஒரு காசாவது மீதப்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் ஒழுக்கம் என்பது இதுதான் என்பேன்.

(வி. 14.7.61 ; 4 ; 4)

மணமக்கள், வாழ்க்கையில் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவராக இருக்க வேண்டும். நம்மால் நன்மை செய்ய இயலாவிட்டாலும், கேடாவது ஏற்படாத மாதிரி நடந்துகொள்ள வேண்டும். நல்வாழ்வும் நாணயமான வாழ்வும் பெறக் குழந்தைப் பேற்றைக் குறைத்துக் கொண்டு, வாழ்க்கை வசதிகளை நல்ல வண்ணம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

(வி. 27.11.61 ; 1 ; 5)

என்ன சிரமப்பட்டாவது இந்த உலக நடவடிக்கைகளுக்கு ஏற்றபடி, மணமக்கள் தங்கள் வாழ்க்கையைப் பொருத்திக்கொள்ளவேண்டும்; மறு உலகத்தை மறந்துவிட்டு இப்போதைய வாழ்க்கைக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும்.

(வி. 5.11.62 ; 2 ; பெ. செ.)

கணவன்— மனைவி என்பது கிடையாது. ஒருவருக்கொருவர் துணைவர்கள், கூட்டாளிகள் என்பதுதான்; இதில் ஒருவருக்கொருவர் அடிமை ஆண்டான் என்பது கிடையாது. இருவரும் சம தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

(வி. 12.2.68 ; 3 : 4)

சுதந்திரமான காதலுக்கு இடமிருந்தால்தான் ஒரு நாடோ, ஒரு சமூகமோ அறிவு, அன்பு, நாகரிகம் தாட்சண்யம் முதலியவைகளில் பெருக்கமடையும். நிர்ப்பந்தக் காதல் இருக்குமிடத்தில் மிருகத் தன்மையும் அடிமைத் தன்மையும்தான் பெருகும்.

(கு. 30. 11. 29 : 8 பொ.ம.)

ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்.

(கு. 21. 7. 45; 2 : 2)

குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்குத் தகுதியற்ற பருவத்தில் உள்ள சிறுமியர்களை மணம் என்னும் கயிற்றினால் பிணித்துக் குடும்பம் என்னும் குழியில் வீழ்த்திக் கணவன் என்னும் விலங்கனைய காவலாளி கையில் ஒப்புவிக்கும்படி எந்த அறநூலும், எந்தத் தர்ம சாத்திரமும் போதிக்கவில்லை.

(கு. 7. 6. 25 ; 6 : 3)

சட்டத்தை மீறி நடத்தும் கல்யாணங்களில் சம்பந்தப்பட்டவர்கள்மேல் வழக்குத் தொடுக்கும் உரிமை காவல் துறையினருக்கும், பொதுமக்களுக்கும் தாராளமாக இருக்க வேண்டும்.

(கு. 3. 3. 35; 4 :4)

ஆண் பெண் சமத்துவமாய்ப் பாவிக்கப்பட்டுச் சமத்துவமாய் நடத்தப்படுவதாக இருந்தால்தான் வாழ்க்கை ஒப்பந்தங்கள் அதாவது திருமணக் காரியங்கள் இருக்க வேண்டுமே ஒழிய, அப்படி இல்லாவிட்டால் பெண்கள் 'திருமணம்' இல்லாமல் தனித்து வாழ்வதே மேல். எதற்காக ஆணுக்குப் பெண் அடிமையாக இருக்க வேண்டும்?

(கு. 13.12.36 : 2)

திருமணங்களில், மக்களின் சராசரி வரும்படியில் ஒரு 10 நாள் அல்லது 15 நாள் வரும்படிக்குமேல் செலவு செய்ய அனுமதிக்கவே கூடாது. மற்றும், நாள் சுருக்கமும் ஒரு மாறுதலாகும்.

(கு. 13.12.36; 10:4)

109—31—9

கல்யாணம், திருமணம் என்கிற பெயர்களைக்கூட நான் ஒப்புக் கொள்வதில்லை. வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்றுதான் நான் சொல்வது. ஆகையால் ஒப்பந்தத்துக்கு உறுதி மொழியும், அவசியப்பட்டால் பதிவு ஆதாரமும் தவிர வேறு காரியங்கள் எதற்கு? அதன்மூலம் அறிவு, காலம் பணம், ஊக்கம், சக்தி இவை ஏன் வீணாக வேண்டும்?

(வி. 22.6.40, 3;2.)

இரண்டு மூன்று நாட்களுக்காக, சிலர் பார்த்துப் புகழ் வதற்காக என்று செய்யப்படும் தாறுமாறான ஆடம்பரச் செலவுகள், கல்யாணத் தம்பதிகள் தலையிலோ அல்லது குடும்பத்தார் தலையிலோ விழுந்து கல்யாணக் கடன்களால் வெகுநாளைக்கு அவதிப்பட வேண்டியிருக்கிறது; சில குடும்பங்கள் கல்யாணச் செலவாலேயே 'பாப்பர்' ஆகி விடுகின்றன.

(பெ.சி. 1 : 185)

ஆணும், பெண்ணும் பதிவாளர் அலுவலகத்துக்குப் போய், ''வாழ்க்கைத் துணைவர்களாகி விட்டோம்'' என்று சொல்லிக் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டால் போதும். அந்த வெறும் கையெழுத்துத் திருமணத்திற்கு அதிக மதிப்பும் நன்மையும் சுதந்திரமும் உண்டு.

(கு. 7.6.36; 11: 4)

மணமுறைக்குப் பழமையைத் தேடித் திரிய வேண்டிய தில்லை. கால நிலைக்கும் சமுதாய நிலைக்கும் அறிவு முதிர்ச்சி நிலைக்கும் ஏற்றபடிதான் முறைகள் வகுக்கப்பட வேண்டுமே ஒழிய, ஒரு காலத்து முறைகளே எக்காலத் திற்குமென்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள்.

(வி. 30.10.40; 5: 6)

சுயமரியாதைத் திருமணம் என்பது அறிவு ஆராய்ச்சி யின் காரணமாய் ஏற்பட்டது.

(கு. 24.11.40; 2:3)

திருமணம் என்பது மணமக்களை மட்டும் பொறுத்த தல்ல. நாட்டின் முன்னேற்றத்திலும் தொடர்பு கொண்டிருக்கிறது.

(வி. 23.11.48; 3:5)

இளைஞர்கள்

இளைஞர்கள் குழந்தைகளுக்குச் சமானமானவர்கள். சமீபத்தில் உள்ளதைப் பற்றுகிறவர்கள்; பின்விளைவை அனுபவித்து அறியாதவர்கள். கண்ணோட்டம் விழுந்தால் பற்றிவிடுபவர்கள். எழுச்சி என்பது எங்கெங்குக் காணப் படுகின்றதோ, கூட்டம் குதூகலம் என்பவை எங்கெங்குக் காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் பற்றுவதும், அவை மறைந்தால் கைவிட்டுவிடுவதுமான குணமுடைய வர்கள்.

(கு. 19.1.36, 8: 4)

வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால் தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

(கு. 19,1,36; 9:1)

வாலிபப் பருவம், அபாயகரமான பருவம். சுலபத்தில் நெருப்புப் பற்றிக் கொள்ளக்கூடிய பொருளைப்போல் மிகப் பத்திரமாய் காப்பாற்றப்படவேண்டிய பருவம்.

(கு. 26.4.36; 13: 4)

வாலிபர்கள் சுயமாகச் சிந்திக்குமாறு பழக்கப் படுத்துவதேயில்லை ; பகுத்தறிவை உபயோகிக்கச் சந் தர்ப்பமளிக்கப்படுவதே இல்லை ; அறிவுக்கும் அனுபவத் துக்கும் சம்பந்தப்படுத்திப் பழக்குவதே யில்லை. இத்தகைய நிலைமை மாறாதவரை, வாலிபர்கள் சுயமாகச் சிந்தித்துப் பார்த்து ஆராய்ந்து, தாங்களே ஒரு முடிவுக்கு வருவது முடி யாததாகும்.

(கு. 31.12.39;8: 3)

பித்தலாட்ட, மத சம்மந்தமான மூட நம்பிக்கைகள் அனைத்தையும் ஒழிக்க வாலிபர்கள் முனைய வேண்டும்.

(வி. 20,3 5 : பெ.செ.)

அரசியல்

பிறவியிலும் பணத்திலும் உயர்வு தாழ்வு இல்லையானால் ஆளுவதிலும் ஆளப்படுவதிலும் உயர்வு தாழ்வு இல்லாமல் போய்விடுமே என்று அரசன் பயப்படுகிறான்.

(கு. 3.11; 129 : 8)

சட்டசபை உறுப்பினர்கள் அரசாங்கம் என்பதைச் சமூக நன்மைக்கு ஏற்ற ஓர் அமைப்பாக, அதுவும் மக்களின் உண்மைப் பிரதிநிதித்துவம் கொண்ட பஞ்சாயத்தாகத்தான் கருத வேண்டுமே ஒழிய, அதை ஓர் அதிகார அமைப்பாகவோ, கவுரவப் பதவி வகிக்கும் அமைப்பாகவோ கருதக்கூடாது.

(கு. 20.8.33;13:2-3)

பொதுவாக ஓர் அரசியல் நிர்வாகம் இருக்கவேண்டும் என்றும், மக்களுடைய நலன்களை அந்நிருவாகம் ஏற்று நடத்தவேண்டும் என்றும் ஆசைப்படுவதன் காரணமெல்லாம், எளியோரைச் செல்வவான்கள் கொடுமைப்படுத்தாமலும், நல்லவர்கள் என்னும் சாதுக்களைப் போக்கிரிகள் தொல்லைப்படுத்தாமலும், பாமர மக்களைக் காட்டு ராசாக்கள் கொள்ளை கொள்ளாமலும் இருக்கவேண்டும் என்கின்ற காரணங்களுக்காகவே அரசியல் நிர்வாகம் வேண்டும் என்பதாக இருந்து வருகிறது.

(கு. 8.9.35; 11 : 2)

ஆட்சி முறை ஒழுங்காக நடக்க, ஆட்சியாளர் யோக்கியமானவராக இருக்கவேண்டும். இதற்கு, ஆட்சியின் உத்தரவை, ஒழுங்கை, சட்டத்தை மீறுகிறவர்கள் ஆட்சிக்குத் தகுதியற்றவர்கள்; தேர்தலுக்கு நிற்கத் தகுதியற்றவர்கள் என்று விதிவகுக்கப்பட வேண்டும்.

(வி. 1.3.68; 2: பெ.செ.)

என்ன செய்தாவது பணம் சம்பாதிக்கவேண்டுமென்பவர்களே பிரமுகர்களாகவும், என்ன பண்ணியாவது சமதர்மத்தை ஒழிக்க வேண்டுமென்பவர்களே விளம்பரக்காரர்களாகவும் இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குச் மக்களாட்சியில், ஆதிக்கத்தில், அரசியலில் நண்டிப்பாக இடமில்லாதபடிச் சட்டம் செய்யவேண்டும்.

(வி. 19.12.69; 2:2)

அரசியல் என்பது யார் நம்மை ஆள்வது என்பதைப் பற்றியதல்ல. நமது மக்களுக்கு எந்தமாதிரியான ஆட்சி முறை இருக்கவேண்டும் என்பதைப்பற்றியதே ஆகும்.

(கு. 26.2.28 ;11 :3)

ஒரு தேசத்தை, அல்லது ஒரு சமூகத்தை ஒருவர் ஆட்சி புரிவது என்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக் காகவே ஒழிய ஆட்சிபுரிவோரின் நன்மைக்காக அல்ல.

எந்த அரசாங்கம் தனது பொறுப்புக்களை மக்கள் மீதோ, மக்கள் பிரதிநிதிகள் மீதோ போட முனைந்து நிற்கின்றதோ அந்த அரசாங்கம் தனது பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொண்டதோடு தனது கடமையிலிருந்தும் நழுவிக் கொண்ட குற்றத்துக்குப் பாத்தியப்படத் தக்க அரசாங்கமேயாகும்.

(கு. 21.4.35; 5: 4)

நம் நாட்டுக்கு இன்று எவ்வித அரசியல் கிடைப்பதானாலும் அதில் சமூக சமத்துவமும், சமூக ஒற்றுமையும் உண்டாக்கக்கூடிய தன்மை இருக்கவேண்டும்.

(கு. 16.5.37; 11: 4)

ஓர் இணைச் செருப்பு 14 வருட காலம் இந்த நாட்டை அரசாண்டதாக உள்ள கதையைப் பக்தி விசுவாசத்தோடு படிக்கும் மக்களுக்கு மனிதனே அல்லாமல் ஓர் இழிவான மிருகம் ஆட்சி செய்தால்கூட—அது அதிகமான அவமானம் என்றோ குறை என்றோ நான் சொல்ல வரவில்லை—ஆனால் மனிதனானாலும், மிருகமானாலும் எந்தக் கொள்கையோடு எந்த முறையோடு ஆட்சி புரிகின்றது, அதனால் பொது மக்களுக்கு என்ன பலன் என்பது தான் எனது கவலை.

(கு. 6.6.37; 8:4)

மக்களுக்கு நாணயமாக, நடுநிலையாகத் தொண்டாற்றுவதும் தயவு தாட்சண்யம் அனுதாபம் ஆகியவைகளுடன் மக்களிடம் நடந்துகொள்வதும் அதிகாரிகளின் கடமையாகும்.

(வி. 25.1.47; 3:4)

மக்கள் நலத்திற்காக எந்த அரசாங்கத்துக்கும் அடக்குமுறை என்ற ஆயுதம் இருந்தே ஆகவேண்டும். அடக்குமுறை இல்லாத ஆட்சி, 'அனார்க்கிசம்' என்ற குழப்பமும், காலித்தனமும் கொண்ட அநாகரிக ஆட்சியே ஆகும்.

(வி; 9.2.65, 1:பெ. செ.)

பணம் உள்ளவனும் பணம் இல்லாதவனும் உலகத்தில் இருக்கும்வரை இலஞ்சம், பிச்சை முதலானவைகள் ஒழியவே ஒழியாது.

(கு. 20.8.33 ; 11 : 13)

இலஞ்சம் ஒழிய வேண்டுமானால், தனி உடைமைத் தர்மம் அழிந்து, ஒழிந்து, பொதுஉடைமை நிலை ஏற்பட்டால்தான் முடியும். அதில்லாதபடி இலஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசுவது மனுதர்மம் பேசுவதேயாகும்.

(கு. 20.8.33 ; 13:2)

சனநாயக வாழ்வு என்பது பண்பட்ட மக்களிடையே இருக்க வேண்டியதாகும்.

(கு. 10.7.69: 3:5)

புரட்சி என்றால் அடியோடு ஒழிப்பது, மாற்றி அமைப்பது என்பதுதான் பொருள். எனவே இந்தச் சமுதாயம், அரசியல், மதம் ஆகிய துறைகளில் பெரிய தலைகீழ் மாற்றம் செய்தாக வேண்டும்.

(வி. 25.5.61; 1:பெ. செ.)

'சனநாயகம்' என்றால் மக்களாட்சி என்பதுதான் உண்மையான கருத்து அப்படிப்பட்ட 'சனநாயகத்திற்கு' மக்கள் அறிவாளிகளாகவும், ஓர் அளவிறகாவது யோக்கியர்களாகவும், ஒழுக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

(வி. 22.4.65 ; 2 : 1)

சரியாகவோ தப்பாகவோ இந்தியாவில் ''சனநாயக'' ஆட்சி வந்துவிட்டது. ஆனால் கட்சி ஆட்சிகள் அதைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கின்றன. இதைப் பார்த்த மற்ற நாட்டார் என்ன நினைப்பார் ? சனநாயகவாதிகள் வெட்கப்பட வேண்டாமா ?

(வி. 19.3.68 ; 2 : பெ.செ.)

ஒருவனுடைய எவ்வித அபிப்பிராயத்தையும் மறுப்பதற்கு யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அதை வெளியிடக்கூடாது என்று சொல்வதற்கு எவருக்கும் உரிமை இடையாது.

(கு. 13.4. 30; 12 : 2)

போட்டி, தேர்தல்வரைதான் இருக்கவேண்டும். தேர்ந்தெடுத்து உள்ளே வந்துவிட்டால் இருவரும் சேர்ந்து காரியம் செய்ய முன்வரவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய முடியும்.

(வி. 13.12.69; 3:4)

சர்வாதிகாரிகள் தங்களுக்கு எதிராக யாரும் இருத்தல் கூடாதென்றும் தங்கள் முடிவை யாரும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்துவார்கள். அந்நாடுகளில் மக்களுக்குச் சுயமாகச் சிந்திக்கும் சுபாவம் கிடையாது. சுயமாக நடக்கச் சுதந்திரம் கிடையாது.

(கு. 24.12.39; 8:1)

எந்த நாடும் முதலில் சமூகச் சீர்திருத்தமும் சமூக ஒற்றுமையும் பெறாமல் அரசியல் சுதந்திரம் பெற்றதாக யாரும் கூறமுடியாது.

(கு. 26.2.28 : 11)

அரசியல் என்பதே சமுதாயக் கோளாறுகளை ஒழிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஒரு சாதனம்தான். சமுதாய வேலையைக் கலக்காத ஓர் அரசியல் மனித சமுதாயத்திற்கு எதற்காக வேண்டும்?

(கு. 29·6·46 : 5:3)

சமுதாயத் துறைக்குப் பாடுபடுவதுதான் உண்மையான அரசியல் தொண்டாகும்.

(வி. 1.6.61; 1:பெ.செ.)

உண்மையான அரசியல் வளரவேண்டுமானால் மக்களிடம் மனிதத்தன்மை வளரவேண்டும். ஒழுக்கமும் நாணயமும் ஏற்படவேண்டும். மற்றவர்களிடம் அன்பு காட்டி நடந்துகொள்ளவேண்டிய அவசியம் உணரப்பட வேண்டும்.

(வி.7.7.62;1:பெ.செ.)

கட்சிப் பூசல்களால், போராட்டங்களால் நிர்வாகம் சரியாக இயங்க முடியாமல் போனால் மக்கள்தான் தொல்லைப்பட நேரிடும்.

(வி. 29.8.67: பெ.செ.)

நமது அரசாங்கம் சிறந்த அறிவுள்ள—தொழில் மூளையுள்ளவர்களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் பட்டம் பெற்றவர்களையே தேடி, அவர்களை நம்பிப் பயன்படுத்துவதால்தான் தொழில் துறையில் இழப்பு ஏற்படுவதோடு தொழில் முன்னேற்றமும் தடைப்படுகிறது.

(வி. 11.5.68; 2: பெ.செ.)

அரசியல் மூலம் பணம், புகழ், பதவி முதலியவற்றைச் சம்பாதிக்கத் திட்டமிடும் கூட்டத்தினர் மனித சமுதாயத்திற்கு எலும்புருக்கி நோய் போன்றவர்கள்.

(வி. 19.3.50: பெ.செ.)

அடிக்கடி கட்சி மாறிக் கொண்டும் மந்திரி சபைகளைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தும் அராசகம் விளைவித்துவரும் நிலையில், இந்த நாடு சுதந்திரத்துக்கோ சனநாயகத்துக்கோ அருகதையுள்ள நாடாகுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

(வி. 15.2.1968 ; 1 : பெ.செ.)

பொதுத்தொண்டு

மனிதன் மற்ற மிருகங்களைப்போல் அல்லாமல் மக்களோடு கலந்து ஒரு சமுதாயமாக வாழ்கிறான். சமுதாயப் பிராணியாக வாழும்போது மற்றவர்களுக்கு ஏதாவது தொண்டு செய்துதான் வாழவேண்டும். மற்றவனிடமிருந்து தொண்டைப் பெற்றுத்தான் வாழ வேண்டும். மனிதன் எந்தவிதத்திலாவது சமுதாயத்துக்குப் பயன்பட்டுத்தான் தீரவேண்டும். அந்த முறையில் என்னால் சமுதாயத்திற்கு ஏதாவது செய்யக்கூடுமானால் வாழவேண்டும், அதல்லாமல் ஏதோ ஓர் ஆள் சோற்றுக்குக் கேடாக வாழ்வதென்றால் எதற்காக வாழவேண்டும்?

(வி. 18.10.57; 3 : 2)

தன்னலமற்ற பொதுத்தொண்டு செய்பவர்கள்—பிரதி பலன் கருதாது உழைக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை நாட்டில் மேன்மேலும் பெருகவேண்டும். அவர்களின் சீரிய குணங்கள் பொதுமக்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். மனிதனாகப் பிறந்தவன் பொதுவாழ்வில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதற்கு அவர்களின் வாழ்க்கையே எடுத்துக்காட்டாக இருக்கும்.

(வி. 17.8.61 : 1 பெ.செ.)

பிறப்பதும் சாவதும் இயற்கை. ஆனால் மக்கள் பாராட்டுதலுக்கு உகந்தவகையில் வாழ்தல் வேண்டும். மக்கள் ஒருவரைச் சும்மா போற்றமாட்டார்கள். நாம் மற்ற மக்களும் போற்றும்படியான வகையில் காரியமாற்ற வேண்டும்.

(வி. 21.1.62 : 1 பெ.செ.)

ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம். அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்படவேண்டும்.

(வி. 4.5.62 : 1 பெ.செ.)

சுகபோகத்தினால் இன்பம் காண்பதில் பெருமை இல்லை. தொண்டு காரணமாக இன்பம் காண்பதே சிறந்த இன்பமாகும். வாழ்வு என்பது தங்களுக்கு மட்டும் என்று கருதக் கூடாது. மக்களுக்காகவும் தொண்டுக்காகவும் நம் வாழ்வு இருக்கவேண்டும் என்று கருதவேண்டும்.

(வி. 2.7.62 ; 1 பெ.செ.)

10.9-31—10

நான் வேண்டிக்கொள்வது மனிதனுக்கு அறிவு— பகுத்தறிவு ஏற்படும்படியான பணியினைத் தொண்டினைச் செய்யுங்கள் என்பதுதான். இல்லாவிட்டால் இன்னும் கொஞ்ச நாளிலே மனிதன், முன்னாலே கை இருப்பது சோறு தின்பதற்கு, மற்ற காரியங்களுக்கு என்பதை மறந்து அதையும் காலாக நினைத்து நான்கு கால்களிலே நடக்க ஆரம்பித்துவிடுவான்.

(வி. 2.1.68; 3, 5.)

ஒருவன் தன்னுடைய சொந்தக் காரியத்தைப் பொறுத்த மட்டில்தான் மானத்தையும், கவுரவத்தையும் கவனிக்க வேண்டும். பொதுநலம், பொதுத் தொண்டு என்று வந்துவிட்டால் அவை இரண்டையும் பார்க்கக்கூடாது.

(கு. 30.9.44 : 2)

பொதுக் காரியத்தில் ஈடுபடுகிறவர் எவராவது தன் கவுரவத்தைப் பற்றிச் சிந்திக்கிறார் என்றால் அவர், தன் சொந்த கவுரவத்திற்காகப் பொதுக் காரியத்தைப் பயன்படுத்திக்கொள்பவரேயாவார்.

(அறிவுப் பேழை : 1976)

பொது வாழ்வில் இருப்பவர்களுக்குச் சற்று அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக புத்தியும் வேண்டும்.

(வி. 12.9.61 : 1 பெ.செ.)

ஒரு மனிதன் தனது காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ, வலி இருந்தாலும் அவன் எனக்கு வலிக்கிறது என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும் குறைபாடுகளையும் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும்படியும் அனுபவிப்பதுபோல் துடிக்கும்படியும் எந்த அளவு ஈடுபாடு கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு கூட்டு வாழ்க்கையும் ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

(வி. 12.1.58; 2 : 1)

"பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற இருக்கின்றோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நமது லட்சியம் அல்லது கடமை-" என்று கருதிக்கொண்டிருக்கின்றவர்கள் பொதுக் காரியங்களில் பிரவேசிப்பதாலேயே உண்மையான லட்சியங்கள்—பொதுக்காரியங்கள் பாழாகின்றன. அன்றியும், அவர்களுடைய பொதுநலச் சேவையும் நாணயக் குறைவானது என்று கருதப்படவேண்டியதுமாகிறது.

(கு. 30.8.31; 10 : 4)

பொதுச் சொத்து என்றால் கொள்ளை அடிக்கத் தகுந்தது என்பது ஒவ்வொருவனுடையவும் எண்ணமாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள் ஒரு நாளும் பொது நிர்வாகத்துக்கு அருகதையுடையவர்களாக மாட்டார்கள்.

(பெ. சி. II : 887)

நிலம், காணி இவையெல்லாம் எவ்வளவு சேர்த்து வைத்திருந்தாலும் அவன் செத்துப்போனதும் அவனது என்று சொல்லமாட்டார்கள். அவனுடைய மகனது என்றுதான் கூறுவார்கள். இது இயல்பு. தனது என்று கூறும்படியானது தொண்டு ஒன்றுதான். மற்றவர்களுக்காகப் பலனை எதிர்பாராமல் தொண்டு செய்வதுதான்.

(வி. 11.4.59 ; 3 : 3)

சமுதாயத்துக்கு உண்மையாய்த் தந்திரபுத்தி இல்லாமல் பாடுபடுகிறவன்தான் உண்மையான இயற்கைப் புகழ் அடைகிறான். அப்புகழ்தான் அவனுக்குக் கிடைக்கும்.

(வி. 21.3.50 ; 3 : 5)

அறம் என்றால், மக்களுக்குத் தம்மாலான நல்லனவற்றைச் செய்வதுதான். அதுதான் உண்மையான தொண்டு. இதனை விடுத்து, இந்த உலகத்தை விட்டு மோட்ச உலகம் செல்லவேண்டும் என்று கருதியோ, மற்ற முட்டாள்தனமான காரியங்களுக்கோ தொண்டு செய்வதனால் உண்மையான இன்பம் கிட்டாது.

(வி. 16.8.61 ; 1: பெ.செ.)

பொதுத் தொண்டில் நம்முடைய வேலைக்கு உரைகல்லாக உபயோகப்படுவதே, பிறருடைய தூற்றுதலைச் சகிப்பதுதான்.

(வி. 31.3.50 ; 3: 6)

பொதுத் தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லைகள் அவன் தனது இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலை.

(வி. 20.9.62; 21 : பெ.செ.)

சேவை என்பது கூலியை உத்தேசித்தோ தனது சுய நலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல. மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்கு ஆகவே செய்யப்படும் காரியம்தான்.

(கு. 17.11.40)

எல்லோருடைய தனிப்பட்ட சுயநலத்தையும் பொறுத்த தான காரியம் எதுவோ, அதுதான் மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தக்கூடியதான பொதுக் காரியமாகும்.

(வி. 4.7.49 ; 2 : 3.)

எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும் ஏச்சு வந்தாலும் எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசி வரை கொள்கையை நழுவவிடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.

(வி. 6.1.58 ; 1 : பெ.செ.)

சமுதாயத் தொண்டு செய்வது இலேசான காரியமல்ல; கடவுள் தொண்டு, தேசத் தொண்டு என்பவைகளை யாரும் செய்யலாம்; சமுதாயத் தொண்டு செய்வது சிறுமைக்கும், எதிர்ப்புக்கும், மானாவமானத்திற்கும் உரியதானதால் யாரும் இத்தொண்டிற்கு முன்வருவது கிடையாது.

(வி.25.11.69 ; 3 : 1.)

சாதி ஒழிப்பு

சாதி, மதம், பழக்க வழக்கம் ஆகியவைகளில் மாற்றம் செய்யச் சம்மதிக்கவில்லையானால் வேறு எந்தவிதத்தில் இந்நாட்டு மக்களுக்கு விடுதலையோ, மேன்மையோ, சுயமரியாதையோ ஏற்படுத்த முடியும்?

(கு. 2. 6. 35. : 11)

ஒரு பெருங்கூட்ட மக்கள் இன்று சமூக வாழ்வில் தீண்டப்படாதவர்களாவும், மற்றொரு பெருங்கூட்டமக்கள் சமூக வாழ்வில் சூத்திரர்கள், அடிமைகள், கூலிகள், தாசிமக்கள், இழிமக்கள் என்கின்ற பெயருடனும் இருந்து வருகிறார்கள் என்றால், இது மாறுவதற்கு அருகதை இல்லாத சுயராச்சியம் யாருக்கு வேண்டும்? இது மாறுவதற்கு இல்லாத மதமும், சாத்திரமும், கடவுளும் யாருக்கு வேண்டும்?

(கு. 23. 6. 35 : 12)

கட்சிகள் இந்த நாட்டில் பெரும்பாலும் சாதி இனத்தைப்பற்றியவைகளாக இருப்பதால், பொதுமக்கள் நலத்தைவிட அவரவர்கள் கட்சி நலத்தையே கருதி அரசியல் நடக்கிறது.

(கு. 18. 12. 43: 3)

சுதந்திர நாட்டிலே அந்நாட்டு மகன் சூத்திரனாக முடியுமா? சுதந்திர நாட்டிலே அந்நாட்டு மக்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுவார்களா? சுதந்திர நாட்டிலே அந்நாட்டவர்களை அடிமைகள் என்றும், நீசர்களென்றும், இழிமக்களென்றும் கருதும் மதங்களும், புராணங்களும், சட்டங்களும் இருக்க முடியுமா? சிந்தித்துப் பார்த்துச் செயலாற்றுங்கள்.

(வி. 22. 2, 61 : 1)

எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல. அதுபோலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

(வி. 13.11.61; 1, பெ. செ.)

நோய் வந்தபின் நோய்க்கு மருந்து கொடுத்து வைத்தியர்கள் குணமாக்குகிறார்கள். ஆனால் அந்த நோய் அடுத்தடுத்து வராமலிருக்க அதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து அவற்றை ஒழிக்கவேண்டாமா? நோய் வந்துகொண்டேயிருப்பதும் அவ்வப்போது மருந்து கொடுத்துக் கொண்டேயிருப்பதும் பயனுள்ள செயலாகுமா? அது போலத்தான் சமுதாயத்தை நாசப்படுத்திவரும் சாதி நோய்க்கான மூல காரணங்களைக் கண்டறிந்து ஒழிக்கவேண்டும்.

(வி. 25.7.62 ; 1 : பெ. செ.)

பிறவியால் கீழ்-மேல், உயர்வு-தாழ்வு கற்பிக்கும் சாதிமுறை என்பதை அடியோடு போக்கடிக்க வேண்டும்.

(பெ. ஒ. வா. நெ : 29)

மனிதன் திருடுகிறான், பொய் பேசுகிறான், பாடுபடாமல் வயிறு வளர்க்கப் பார்க்கிறான். இவனை மக்கள் இகழ்வதில்லை, சாதியை விட்டுத் தள்ளுவதில்லை ; ஆனால் சாதியைவிட்டுச் சாதி சாப்பிட்டால், கல்யாணம் செய்தால், சாதியை விட்டுத் தள்ளிவிடப்படுகிறான். இந்த மக்களின் ஒழுக்கம், நாணயம் எப்படிப்பட்டது பாருங்கள்.

(கு. 20.12.36 ; 14 : 4)

ஓரிடத்தில் ஓர் உப்புக் கிணறும் மற்றொரு நல்ல தண்ணீர்க் கிணறும் இருக்கிறது என்றால், நல்ல தண்ணீரை ஒரு பகுதி மக்கள் மட்டும் அனுபவிக்க வேண்டும்; உப்புத் தண்ணீரை மற்றபகுதி மக்கள் அனுபவிக்க வேண்டும் ; இவர்கள் நல்ல தண்ணீரை உபயோகிக்க லாயக்கற்றவர்கள் என்றிருக்குமானால், அக்கொடுமை எவ்வளவு வேதனை தரக் கூடியது என்பதைச் சிந்திக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட வேதனை தரும் அளவுக்குச் சாதிமுறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிலர் மட்டும் சுகம் அனுபவிப்பதற்கென்றும் மற்ற பலர் வேதனைப்படுவதற்கென்றுமே அமைக்கப்பட்ட சாதிமுறைகள் இந்நாட்டைவிட்டு அகலும்வரை நமக்குள்ள கொடுமைகள் நீங்காதென்பது திண்ணம்.

(வி. 30.3.56 ; 3 : 6)

நமக்கு ஓர் அறிவு அதிகமிருந்தும் பயன் என்ன? மிருகங்களுக்கு ஓர் அறிவு குறைவு என்றாலும் சாதி இல்லையே! மிருகங்களுக்கு அறிவில்லாததின் பயன் சாதி இல்லை. நமக்குள்ள இழிவு, சாதியால்தானே! இதைச் சிந்திக்க வேண்டாமா?

(வி. 8.7.61; 3.4 : 6.5)

சாதி ஒழிப்புக்கு இன்றைய அரசியல் சட்டம் இடந்தர வில்லை. அதை, அடிப்படை உரிமைக்கு விரோதம் என்கிறது. அதேபோல்தான் வகுப்புவாரி விகிதப் பேச்சும் பேசாதே அது வகுப்புத் துவேசம் என்கிறது. சாதி இருப்பது தவறல்லவாம். சாதிப்படி உரிமை கேட்டால் மட்டும் தவறு என்றால் இதைவிடப் பித்தலாட்டம் வேறு இருக்க முடியுமா ?

(வி. 24.5.61; 1: பெ.செ.)

சாதி எனும் வார்த்தையே வடமொழி, தமிழில் சாதி என்பதற்கு வார்த்தையே இல்லை. என்ன இனம்? என்ன வகுப்பு? என்று மட்டுமே கேட்பார்கள். பிறக்கும்போது சாதி வித்தியாசத்தை, அடையாளத்தைக் கொண்டு பிறப்பதில்லை, மனிதரில் சாதி இல்லை. ஒரு நாட்டிலே பிறந்த நமக்குள் சாதி சொல்லுதல் குறும்புத்தனம்.

(வி. 15.9.57; 3: 1–2.)

பல்துறை

சிலர் சாமியைப் பார்த்தால் சாமி சக்தி ஓடிப் போவானேன்? சிலர் கோயிலுக்கு வந்தால் கோயிலும் சாமியும் தீட்டுப்பட்டுப் போவானேன்? சிலர் சாமியைத் தொட்டால் சாமி இறந்து போவானேன்? ஒரே பெயரும் உருவமும் உள்ள சாமிக்கு ஊருக்கு ஒரு விதமாய்ச் சக்திகள் ஏற்பட்டிருப்பானேன்?

காசி, பூரி, பண்டரிபுரம் முதலிய ஊர்களில் உள்ள சாமிகள் யார் தொட்டாலும் சாவதில்லை. அங்குக் கோயிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் தாங்களே நேரில் சாமியைத் தொட்டுத் தலையில் தண்ணீர்விட்டு மலர் போட்டுக் கும்பிடுகிறார்கள். அதே பெயருள்ள சாமி நமது தமிழ் நாட்டில் மட்டும் நாம் தொட்டால் செத்துப் போய் விடுகிறதே, ஏன்? இப்படிச் சாமிகளின் சக்தியும் உயிரும் கோயில்களின் யோக்கியதையும் ஊருக்கு ஒரு விதமாய் இருப்பானேன்?

(கு. 9.1.27; 6; 1:2)

உலகம் நாளுக்குநாள் கெட்ட தன்மையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. ஆதலால் உலகத்தை யோக்கியமாகவும், அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்குத் தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத்தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?

(பெ.க.; மு.தொ. : 42)

உண்மையிலேயே கடவுளை நம்புகிறவர்கள் ஒருவராவது இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? இங்கு மட்டுமல்ல உலகத்திலேயே யார் தான் கடவுளை நம்புகிறார்கள்? ஒருவரும் இல்லை என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இப்போதெல்லாம் கடவுளை வணங்குவது என்பது 'ஃபேசன்' ஆகிவிட்டது. பெண்கள் தன்னை அலங்காரம் செய்து கொள்வதை தினம் தினம் ஒவ்வொரு ஃபேசன் ஆக்கிக் கொண்டார்களே அது போலத்தான், பக்தர்கள் கடவுளை வணங்குவதும்.

(வி. 27.7.58; 3:2)

என்றைக்கும் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்துவிட்டு கடனாளியாக மாறிப் பிறரை ஏமாற்றுவது இழுக்கு; இதை விட விபச்சாரம் என்பது இழிவானதல்ல. விபச்சாரத்தை விட மோசமான பண்பு அதிகச் செலவு செய்து அதற்காகக் கடன் வாங்கித் திண்டாடுவதுதான். 30 ரூபாய் சம்பாதிக்கிறவனும் கடனாளி; 1,000 ரூபாய் சம்பாதிக்கிறவனும் கடனாளி என்றால் என்ன அர்த்தம்? தன்னை அடக்காதவனுக்குத்தான் தரித்திரம் உண்டாகும். தன்னை அடக்காதவள்தான் விபச்சாரி.

(வி. 27.7.58; 4: 4)

எவன் ஒருவன் கடன் வாங்காமல் வரவுக்கேற்ற முறையில் செலவுசெய்து வருகிறானோ அவன்தான் பிரபு ஆவான்.

(வி; 23.2.61; 3: 4)

நல்ல குடும்பம் எனப்படுவது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உள்பட்டே அமைத்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.

(வி: 2.11.61; 1:5)

மனிதன் காட்டுமிராண்டித் தனிவாழ்வைவிட்டுச் சமுதாய வாழ்க்கைக்கு வரும்போது ஒவ்வொருவனும் சமுதாய வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்து வாழ்க்கை நிலையை மேம்படுத்திக்கொள்ளலாம் என்று கருதி வந்திருப்பானே ஒழிய, மற்ற மனிதனைக் கொடுமைப்படுத்தி, இழிவுப்படுத்தி, துன்பப்படுத்தி அதன் பயனாய்த் தான் வாழலாம் என்று கருதியிருக்க மாட்டான். அப்படிக் கருதியிருந்தால் சமூக வாழ்க்கை ஏற்பட்டே இருக்காது.

(கு; 26.5.35; 6: 3)

வீடுகட்டிக் கொள்வதும் திருமணம் செய்து கொள்வதும் மனித சமுதாயத்தின் உரிமையானதும், அவசியமானதும், தேவையானதும் ஆன காரியமாகும். எந்த மனிதனுக்கும் தங்குவதற்கு ஒரு குடிசை—அதாவது வீடு தேவை. அதுபோலத்தான் வாழ்க்கைக்கு ஒரு துணை தேவை. இவையிரண்டுமில்லாவிட்டால் நல்வாழ்வு ஆகாது.

(வி: 5.7.62; 1: பெ.செ.)

நம் மக்கள் அறிவுபெற வேண்டுமானால் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளை வெறுத்து ஒதுக்கவேண்டும்.

(வி: 15.7.79:4:7)

109 31—11

உலகில் பத்திரிக்கைகள் இரண்டு விதமானவை. தமது வாழ்க்கைக்கு ஒரு வழி வேண்டுமென்று சுயநலம் கருதுபவர்களால், மக்களைப் பின்பற்றி நடத்தப்படும் பத்திரிக்கை ஒன்று.

மக்கள் சமூகத்தில் சில கொள்கைகளைப் பரப்ப வேண்டுமே என்று பொதுநலம் கருதுபவர்களால், ஒரு குறிப்பிட்ட லட்சியத்தையே பின்பற்றி நடத்தப்படும் பத்திரிக்கை மற்றொன்று.

(கு. 16.8.36; 12: 1)

பத்திரிக்கை படிக்காத மனிதன் சமுதாயத்தில் கேவலப்படுத்தப்படத்தக்கவனாவான்.

(கு. 6.3.38; 8: 4)

ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு, நடவடிக்கைகளை அறிந்து கொள்ளக் கண்ணும் காதும் எப்படி இன்றியமையாத உறுப்பாக இருந்து வருகிறதோ அதைப்போலவே ஒரு நாட்டு மக்களுக்கு நடப்புகளை, வளர்ச்சிக்கு வேண்டியவைகளை அறிந்துகொள்ள இந் நவீன உலகில் செய்திப் பத்திரிக்கைகள் இன்றியமையாத சாதனங்களாகும்.

(வி: 29.3.65; 2: 1)

இந்த நாட்டில், மனிதன் மற்றொரு மனிதனால் எவ்வளவு இழிவாய்க் கருதப்படுகிறான் என்பதை ஒரு மனிதன் உணருவானானால், அவனுக்குக் கடுகளவு சுயமரியாதையாவது இருக்குமானால் அவன் மனித இழிவைப் போக்கத்தான் முதலில் பாடுபடுவான்.

(கு. 14.3.56; 2).

தமது வாழ்க்கையால் பிறர் துன்பம் அடையாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும். இதையே மனித வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொருவரும் வாழ்க்கை நடத்த முயற்சிக்க வேண்டும்.

(வி: 20.3. 50;3 :5)

ஒருவன் வாழ்கிறான் என்றால் அவனுடைய வாழ்க்கையால் பிறர் நன்மையடைந்தார்கள்— மற்றவர்கள் சுகங் கண்டார்கள் என்று அமைய வேண்டும்.

(வி: 20.3.56; 3: 3)

ஒவ்வொரு மனிதனின் இலட்சியமும், தான் மனிதனாகப் பிறந்தது மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதற்காக என்றிருக்க வேண்டும். புதுமைக்கு மக்களைத் திருப்ப வேண்டும். புதுமைகளை மக்கள் உணரும்படிச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் பழைமையை விட்டுக் காலத் திற்கேற்ப முன்னோக்கிச் செல்ல வேண்டும். அப்போது தான் நாமும் மற்ற உலக மக்களைப்போல் சிறப்பாக வாழ முடியும்.

(வி. 25.10.69; 1:1)

எந்தக் காரணத்தைக் கொண்டும் பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும், பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தவும் கூடாது என்பதுதான் தொழிலாளர் கிளர்ச்சியின் முக்கியதத்துவமாக இருக்கவேண்டும்.

(கு. 1.10.33;13:4)

ஒரு மனிதனுடைய சொந்தத்துக்காக என்று ஒன்று இருக்குமானால் அது, அவன் இறந்தபின் அவனை மற்றவர்கள் மறக்காமல் புகழ்ந்து பேசுவதுதான்.

(வி. 31,3.50 ; 3: 5)

சாதாரணமாக, ஒரு மனிதனின் பெருமையைச் சொல்ல வேண்டுமானால் அவன் மறைந்த பிறகு அவனது மறை வைக் குறித்து மக்கள் என்ன பேசுகிறார்களோ அதைத் கொண்டு அவனது பெருமையை நல்லவண்ணம் உணர்ந்து கொள்ளலாம்.

(வி. 24,3.69 ; 3: 1)

மனிதன் சுயேச்சைக்கு உரிமையுள்ளவன். காரணம் அவனுக்குச் சவுகரியம் இருக்கிறது என்பது மாத்திரமல்லா மல் அதற்கு ஏற்ற அறிவு, சக்தி ஆகியனவும் இருக் கிறது. ஆனால், மனிதன் அப்படிப்பட்ட சவுகரியத்தை யும் அறிவையும், சக்தியையும், அடிமைத் தன்மைக்கும் இழிவுக்குமே பயன்படுத்திக்கொள்கிறான். அதனாலேயே மனித வர்க்க வாழ்வில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்க விரும்புகிறோம்.

(கு. 19.1.1936; 9)

தன் இனத்தை வருத்தி வாழ, கீழ்மைப்படுத்திப் பிழைக்க, தன்னின உழைப்பால் கொழுக்க, பகுத்தறிவில் லாத எந்த உயிரினமும் முயற்சிப்பதில்லை. ஆனால்

பகுத்தறிவுள்ளவன் என்று சொல்லப்படும் மனிதன் இத்தனையும் செய்யப் பின்வாங்குவதில்லை.

(வி. 19·4.1950 : பெ. செ.)

மற்றவர்கள் நம்மை மதிக்க மாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பும் பலமாய்விடுமே, நமது செல்வாக்குக் குறைந்துபோகுமே என்கின்ற பயமும் பலக்குறைவும் உள்ளவர்கள் ஒரு காலமும் சீர்திருத்த வேலைக்கு உதவமாட்டார்கள்.

(வி. 25,6.1950 : பெ.செ.)

கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லிச் சோம்பித் திரிந்துகொண்டு தொட்டதற்கெல்லாம் கடவுள் மீது பழி போட்டுத் திரிகின்றவன் ஒரு மூடன்.

(வி. 1.2.1969 : பெ. செ.)

மனிதரில் நல்லவன், அறிவாளி, பரோபகாரி, தயவு, தாட்சணியம் உள்ளவன் என்ற பிரிவே தவிர, தெய்விகச் சக்தி பொருந்தியவன், தெய்வத் தன்மை பொருந்தியவன், தெய்விகத் தன்மையோடு தெய்வத்தினால் உண்டாக்கப் பட்டவன் என்னும் பிரிவுகள் கிடையாது.

(பெ. பொ. : 9)

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கின்ற ஆசை அடிமைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்.

(கு. 9.1.1927 ; 5: 2)

வாலிபர்களுக்குப் புதுமை சீக்கிரம் பிடிக்கும். காரணம் அவர்கள் உள்ளம் எழுதாத வெறும் சிலேட்டுப் போன்றது. வயதானவர்கள் உள்ளம் பல சங்கதிகள் எழுதப்பெற்றது. புதிய தன்மைகள் பதியப்பட வேண்டுமானால், முன்னால் பதிந்தவைகள் அழிக்கப்படவேண்டும். அவைகள், எளிதில் அழிக்க முடியாதபடி ஆழப்பதிந்து போயிருக்கும்.

(கு. 16. 12.4.44 :2)

ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சமமான தகுதியும் சம உரிமையும் உண்டோ, அப்படியே ஒரு தேசத்தில் உள்ளவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழ முடியும்.

(ப. 9.9.34 : 4

சமத்துவ எண்ணம் மக்களுக்குத் தோன்றாமல் இருக்கும் வரை, உயர்நிலையில் உள்ள வாழ்வுக்காரர்களுக்கு நல்ல காலந்தான். அதாவது உயர்வாழ்வுதான். கீழ் நிலையிலுள்ள மக்களுக்குச் சமத்துவ எண்ணம் தோன்றிவிட்டால் உயர்வாழ்வுக்கு ஆபத்து உடனே தோன்றும்.

(கு. 21.4.45 : 5)

நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே, மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை அடிமைத் தன்மையின் வாசனையால் ஏற்பட்டதே தவிர, ஒருகாலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது.

(கு. 8.3.31)

பாமரனின் ஞானசூனியம், சுயநலக்காரனின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல் வேலை செய்வோரே இனிவரும் உலகச் சிற்பிகளாக முடியும்.

(இனிவரும் உலகம் : பக்கம் 20)

நன்றி விசுவாசமுடையவன் எவனோ அவன் மாத்திரமே மனிதனாவான். மற்றவர்கள் நரி, பூனை, பாம்பு, தேள், கொசு, மூட்டைப்பூச்சி முதலிய, அதாவது-மற்றவர்களை ஏய்த்தும், துன்புறுத்தியும், இரத்தம் உறிஞ்சியும் வாழும் பிராணிகளேயாவர்.

(கு. 23.10.43 ; 7 : 1)

அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராததைப் பயத்தால் நம்புகிறவன் பக்குவமடைந்த மனிதனாக மாட்டான்.

(வி. 3.7.50 ; பெ.செ.)

மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

(வி. 10.1.55 ; 2 : 6)

நீதிமுறையையும் நீதி இலாகாவையும் திருத்தினால் புற்றுநோய்க்கும் எலும்புருக்கி நோய்க்கும் மருந்து கண்டுபிடித்தது போலாகும். அவ்வளவு பெரிய நன்மை மனித சமுதாய ஒழுக்கத்திற்கு ஏற்பட்டுவிடும்.

(வி. 17.10.69 ; 2 : 2)

சந்தேகப்பட்டால்கூட நரகம் சம்பவிக்கும் என்ற பயத்தைப் புகுத்தியுள்ளதனால் மனிதன் சிந்திக்கக்கூடப் பயந்து அறிவு வளர்ச்சியற்றவனாகி விட்டான்.

(வி. 10.6.62 ; 1 ; பெ.செ.)

தியாகம் என்பது சுயநலத்துக்கான பயன் எதிர்பாராது பொது நலத்துக்காகப் பாடுபடுவதும் எவ்விதமான அவமானங்களையும் லட்சியம் செய்யாமல் பல இன்னல்களுக்கும் தயாராகித் தொண்டாற்றுவதும் ஆகும்.

(பெ. ம; ப. 141)

நமது நாட்டில் வாசகசாலையின் பெருமையை மக்கள் அறியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, வாசகசாலையின் அவசியம் மக்களுக்கு இருக்கும்படியான அளவு கல்வி இல்லாமலிருப்பது. மற்றொன்று, மக்களுக்குப் பகுத்தறிவு இல்லாமலிருப்பது. இந்த இரண்டும் வாசகசாலையை ஏற்படுத்தவிடாமல், குழவிக் கல்லை நட்டுக் கோயில் கட்டுகிற வேலையில் திருப்பிவிட்டது.

(கு. 2.7,1930 : 8–9)

தொட்டதற்கெல்லாம் 'கடவுள் செயல்' 'கடவுள் செயல்' என்று சமாதானம் சொல்லுகின்றவர்கள். தங்கள் தப்பிதத்தின் காரணத்தை உணராதவர்கள் அல்லது தங்கள் தவறுகளை உணர்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறவர்கள் ஆவார்கள்.

(கு. 4.5.1930 ; 8)

உலகவாழ்வில் மற்றொருவனுக்கு இம்சையின்றி, பிறருக்கு எப்படி உபயோகப்படுவது என்பதையே முக்கியக் கொள்கையாகக்கொண்டு உழைப்பவனுக்கு, வேறுமதம் வேண்டியதில்லை.

(கு. 14.4.1928 : 7)

நாம் தெய்வத்தன்மை என்று எவ்வளவோ சொல்லிக் கொண்டு வாழ்கிறோம்—ஆனால், காட்டுமிராண்டித்தனமாகத்தான் இருக்கிறோம்.

(கு. 17.8.30 : 8)

நிலத்தைத் தானே உழுது, தானே பயிர் செய்து, தன் குடும்பம் முழுவதையும் அதில் ஈடுபடுத்தி அதன் பயனை அனுபவிப்பவர் குடியானவர்.

(கு. 19.9.37 : 9)

ஏதோ ஒரு வழியில் நாம் மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கிவிட்டோமானால், பிறகு அவர்கள் எல்லா வற்றையும் ஒரே கண்ணாடி கொண்டு பார்த்து, உண்மையை உணரக் கூடியவர்கள் ஆகிவிடுவார்கள்.

(உண்மை. 1.2.79)

கொள்கைகளுக்காகவே வாழும் மக்களாக நாம் பலர் ஆகவேண்டும். நமக்கு அக்குப் பிக்கு இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நம்மைக் கண்டால், ‘தீவிரவாதிகள் இவர்கள்; எதற்கும் தயார்’ என்ற நடுக்கம் எதிரிகளிடம் ஏற்பட வேண்டும். இதுதான் தியாகம் என்பது. இத்தகையவர்களுக்குத்தான் இலட்சியவாதிகள் என்று பெயர்.

(பெரியார் 99-வது பிறந்த நாள் மலர்
பக். 47)

நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம். மக்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் அபிவிருத்தி அவசியம்.

(கு. 28.5.49 : 15)

காலத்திற்கேற்ற மாறுதலுக்கு ஒத்துவராதவன் வெற்றிகரமாய் வாழ முடியாது. மாறுதலுக்கு மனிதன் ஆயத்தமாக இருக்க வேண்டும். முன்னேற்றம் என்பது மாறுதல் என்பதை உணர்ந்த மனிதனே உலகப் போட்டிக்குத் தகுதியுடையவனாவான்.

(கு. 26.1.36 : 6)

செல்வம் தேடவேண்டுமென்று அதில் இறங்கியவனுடைய வேலை அவனது வாழ்நாள் முழுவதையும் கொள்ளைகொண்டுவிடுகிறது.

(கு. 8.3.36 : 12)

வாழ்க்கை என்பது தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பது கூடவே கூடாது.

(பகு : 1.11.38 : 42)

பிச்சைக்காரர் இருப்பதும் அவர்கள் பிச்சை எடுப்பதும் மக்கள் சமுதாயத்துக்கு ஒரு பெரும் தொல்லையும், இழிவும், கிரிமினல் குற்றமுமாகும் என்பதோடு, ஒரு கடவுள் இருந்தால் அக்கடவுளுக்கும் இது மிகுந்த அவமானமாகும்.

(பெரியார் 85வது பிறந்த நாள் மலர்)

நாத்திகர்கள் என்றால், அறிவுவாதிகள்-பகுத்தறிவைப் பயன்படுத்துபவர்கள் என்றுதான் பொருள்.

பெ. ம 1979 (வி. 8.5.61;3:5)

மலர்கள்

சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கமே பக்தியைவிட இன்றியமையாதது. ஒழுக்கம் என்பது, சொல்லுகின்றபடியே நடப்பதும் நடந்தபடியே சொல்லுவதுமாகும்.

பக்தி என்பது தனிச் சொத்து. ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து. பக்தி இல்லாவிட்டால், இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால் எல்லாமே பாழ்.

நம் நாட்டுக்கு மனிதன் செய்யவேண்டிய முக்கிய தொண்டு, மக்களைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்குவது தான்.

உள்ளதைப் பங்கிட்டு உண்பது; உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது என்ற நிலை ஏற்பட்டால் கடவுளுக்கு வேலையோ அவசியமோ இருக்காது.

வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்றும் கருத வேண்டும்.

நன்றி என்பது பயன் அடைந்தவர்கள் காட்ட வேண்டிய கடமை; உதவி செய்பவர்கள் எதிர்பார்ப்பது சிறுமைக் குணமே ஆகும்.

தொழிலாளி-முதலாளித்தன்மை முறையே இருக்கக் கூடாது. வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது அடிமைத்தனம்.

உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்.

நாடு, மொழி, கடவுள், மதம், சாதி என்று எந்தப் பற்றுமின்றி, மானுடப் பற்றுடன் அறிவைக்கொண்டு தங்கு தடையின்றி சிந்தித்துச் செயல்புரிவதே பகுத்தறிவாளர் கடமையும், பொறுப்புமாகும்,

உங்கள் அறிவும் மனிதத் தன்மையும் சொல்கிறபடி நடவுங்கள். அவைகளிடம் நம்பிக்கை வையுங்கள்.

பகுத்தறிவுவாதி என்பவன் தனது வாழ்வில், சராசரி மனிதனின் வாழ்க்கைத் தரம் என்னவோ, அந்தப்படி நடந்து கொள்வதை நடப்பு லட்சியமாக்கிக் கொண்டவனாக இருக்க வேண்டும்.

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி ஆகும். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

தீண்டாமை என்பதே சாதி காரணமாக ஏற்பட்டதே தவிர, அதற்கு வேறு காரணமோ ஆதாரமோ இல்லை. சாதியை வைத்துக்கொண்டு தீண்டாமை ஒழிய வேண்டும் என்பது சிறிதும் அறிவுடைமையாகாது.

எந்தத் துறையில் ஆகட்டும், 'சிந்திக்காதே—நம்பு' என்று சொல்லிச் சிந்திக்கவிடாமல் தடுப்பது மனிதனை மிருகத்தைவிடக் கீழான நிலைக்குக் கொண்டு செல்வதாகும்.

தமிழர்களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுப் பிரச்சாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் தன்மையில் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடவுளை மற. மனிதனை நினை.

ஆத்மா என்பது ஆகாயத்தில் தளவாடமின்றிக் கட்டப்பட்ட ஒரு கோட்டை.

ஆசையும் சுயநலமும் அற்றவனுக்குக் கடவுளும் மோட்சமும் தேவை இல்லை.

சாதியை ஒழிக்காமல் பொதுவுடைமை பேசுவது, அரிச்சுவடி படிக்காமல் பி. ஏ. வகுப்பைப் பற்றிப் பேசுவதாகும்.

உன் சொந்த மானத்தை விட்டாகிலும் உன் இன ஈனத்தை ஒழிப்பதற்குத் தொண்டாற்று.

கர்மாவை நம்பினவன் கடைத்தேற மாட்டான்; விதியை நம்பினவன் மதியை இழப்பான்.

மானம் உடையவனுக்குத்தான் மனிதன் என்று பெயர்.

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.

ஒருவனுடைய யோக்கியதையைப் பார்க்க வேண்டுமானால் அவனுடைய விரோதியைப் பாருங்கள்.

அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராததைப் பயத்தால் நம்புகிறவன் பக்குவமடைந்த மனிதனாகான்.

ஒரு காலத்து முறைகளே எக்காலத்துக்குமென்றால் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி இல்லை என்பதுதான் பொருள்.

வாழ்க்கை என்பது தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பது கூடவே கூடாது.

தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழித்தாக வேண்டும்.

ஆடு நரிக்குப் பயன்படுவதுபோல், படிக்காதவன் படித்தவர்கட்குப் பயன்படுகிறான்.

சமுதாயச் சீர்திருத்தத்தின் கடைசி எல்லை பொதுவுடைமை.

பொதுவுடைமை என்பது பகுத்தறிவின் எல்லையாகும்.

உண்மையான மக்களாட்சி என்றால், "பார்ப்பான்" என்ற வார்த்தையும், "சூத்திரன்" என்ற வார்த்தையும் உச்சரிப்புக்காகவும் இல்லாத வழியில் இருக்க வேண்டும்.

மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கிவிட முடியும்.

நான் மூட்டை தூக்குவதில் பாரத்தினால் வேதனைப் பட்டிருப்பேனேயொழிய, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் வேதனைப்பட்டதில்லை.

நான் மனிதனே!

நான் சாதாரணமானவன்; என் மனத்தில் பட்டதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதுதான் உறுதி இதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்லவில்லை; ஏற்கக்கூடிய கருத்துக்களை உங்கள் அறிவைக் கொண்டு நன்கு ஆய்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள்; மற்றதைத் தள்ளிவிடுங்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்தக் குணத்தையும் என்மீது சுமத்திவிடாதீர்கள். நான் தெய்வத் தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டுவிட்டால் மக்கள் என் வார்த்தைகளை ஆராய்ந்து பார்க்கமாட்டார்கள்.

“நான் சொல்லுவதை நீங்கள் நம்புங்கள் ; நான் சொல்லுவது வேதவாக்கு ; நம்பாவிட்டால் நரகம் வரும் ; நாத்திகர்கள் ஆகிவிடுவீர்கள்’’ என்றுவேதம், சாத்திரம், புராணம் கூறுவதுபோலக் கூறி, நான் உங்களை அடக்குமுறைக்கு ஆளாக்கவில்லை. நான் சொல்லுவது உங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, உத்தி, அனுபவம் இவைகளுக்கு ஒத்துவராவிட்டால் தள்ளிவிடுங்கள்.

ஒருவனுடைய எந்தக் கருத்தையும் மறுப்பதற்கு யாருக்கும் உரிமை உண்டு; ஆனால், அதனை வெளியிடக் [illegible]ன்பதற்கு எவருக்கும் உரிமைகிடையாது.

(கு. 13.4.30 ; 12 : 2)

119808